# நக்கல் நமசிவாயம்

இலங்கைய சிங்கப்பூராக்க வேணாம்...
இலங்கைய இலங்கையாவாவது
வச்சிருக்கோணும் பாருங்கோ...




Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 327 பிலவ வருடம், ஆவணி மாதம் 30ஆம் திகதி புதன்கிழமை
(15.09.2021) ஹிஜ்ரி - 1443, ஸபர் பிறை - 07, 0115886187 - பக்கங்கள் 09

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper




# ஐ.நா. ஆணையரின் குற்றச்சாட்டுகளை நிராகரித்தது அரசு

## வெளியாரின் தலையீட்டையும் திட்டவட்டமாக புறக்கணிப்பு

### விளக்கமளித்து அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் நேற்று பதில்

*•நமது நிருபர்*

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்லேவின் இலங்கை தொடர்பான குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள அரசாங்கம், உள்ளக விடயத்தில் வெளியாரின் தலையீட்டை புறக்கணிப்பதாகவும் நேற்று திட்டவட்டமாக அறிவித்தது.

இது தொடர்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஐ.நா. ஆணையாளருக்கு பதில் வழங்கும் வகையில் தெரிவித்துள்ளதாவது,

எமது அரசியலமைப்பு மற்றும் சர்வதேச கடமைகளுக்கு இணங்க, மனித உரிமை முறைமையினால் கட்டளை யிடப் பட்டுள்ள இந்த சபை மற்றும் ஐக் கிய நாடுகள் சபையுடனான எமது வலுவான மற்றும் தொடர்ச் சியான ஒத்துழைப்பை மீண் டும் வலியுறுத்துவதன்...

02»



# தமிழ்க் கைதிகள் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல்!

## இராஜாங்க அமைச்சர் அநுராதபுரத்தில் அட்டகாசம்

*•நமது புலனாய்வு செய்தியாளர்*

அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் இரவு வேளையில் சகாக்களுடன் நுழைந்த இராஜாங்க அமைச்சர் ஒருவர் தமிழ்க் கைதிகளை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இச்சம்பவம் கடந்த 12 ஆம் திகதி இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக அறியமுடிந்தது.

சிறைக்கைதிகளை அழைத்து ஒருவரின் தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

அன்றைய தினம் இராஜாங்க அமைச்சர் தனது சகாக்கள் சிலருடன் திடீரென சிறைச்சாலைக்குள் நுழைந்துள்ளார். அங்கிருந்த உத்தியோகத்தர்களிடம் அதிகாரத் தோரணையில் பேசியுள்ளதுடன் சிறைக்கூடத்துக்குள் இருந்த கைதிகளை வெளியில் அழைத்து துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியுள்ளார்.

குறித்த இராஜாங்க அமைச்சர் தனது சகாக்கள் சிலருடன் வருகை தந்திருந்ததுடன் அவ்வேளையில் அவர்கள் அனைவரும் மதுபோதையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்ததாவது,

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மதுபோதையில் தனது நண்பர்கள் சிலருடன் சிறைச்சாலைக்கு வருகைதந்து அடாவடியில் ஈடுபட்டுள்ளார். அவரது கையில் துப்பாக்கி வைத்திருந்துள்ளார்.

சிறைக்கூடத்திலிருந்து கைதிகள் சிலரை வெளியில் அழைத்து முழந்தாளிடச்செய்து துப்பாக்கியால் மிரட்டியுள்ளார். எனக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம்...

02»



# மலையக மக்கள் எதிர்நோக்கும் உரிமை மீறல்களும் ஐ.நா.வுக்கு

## நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக மனோ எம்.பி. தெரிவிப்பு

எதிர்வரும் ஆண்டில் இந்நாட்டில் வாழும் மலையக தமிழர்கள் எதிர்நோக்கும் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார உரிமை மீறல்களையும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அவதானத்துக்கு முன்வைக்க நாம் உத்தேசித்துள்ளோம் என ஜனநாயக மக்கள் முன்னணி - தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இம்முறை வாய்மொழி அறிக்கையில், "இலங்கை தொடர்ந்து ஐ.நா.வின் கண்காணிப்பு வலயத்தில் இருக்கும் எனவும், இலங்கைக்கு எதிராக இதுவரை ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட சாட்சியங்கள் சேகரிக் கப்பட்டுள்ளதாகவும் அவற்றை மேலும் சேகரிக்க, இவ்வாண்டு மார்ச்சில் எடுக்கப்பட்ட 46/1 தீர்மானத் தின்படி தான் கட்டுப்பட்டிருப்பதாகவும்"...

02»

# அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு உண்டென்பதை ஏற்கிறோம்

## அடுத்தவாரம் நிலைமை சுமுகமாகுமென அமைச்சர் டலஸ் நம்பிக்கை



*•யோ.தர்மராஜ்*

நுகர்வோர் என்ற அடிப்படையில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்காமல் இருக்க முடியாது என அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான டலஸ் அழகபெரும தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு...

02»

# கொழும்பில் தனியார் வைத்தியசாலையில் கைக்குண்டு மீட்பு

கொழும்பு, நாரஹேன்பிட்டி தனியார் மருத்துவமனையின் முதலாம் மாடியில் உள்ள கழிப்பறையில் இருந்து கைக்குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, குறித்த மருத்துவமனையும் அதனை அண்டிய பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த வைத்தியசாலைக்கு முக்கிய பிரமுகர்கள் வருவதால் அவர்கள் எவரையாவது இலக்கு வைத்து இது கொண்டுவரப்பட்டதா? என்ற கோணத்திலும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ உட்பட்ட முக்கிய பிரமுகர்கள் அங்கு சிகிச்சைப்பெற்று வரும் நிலையில், இவ்வாறு குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கொரோனாவிலிருந்து மீள்வதற்கு பேதங்களின்றி இணைய வேண்டும்

## பொன்னாலை கோயிலில் வழிபாட்டின்பின் ஞானசார தேரர் கருத்து



*•யாழ். செய்தியாளர்*

இன, மத, வேறுபாடின்றி அனைவரும் கொரோனா தொற்றில் இருந்து விடுபட வேண்டியே யாழ்ப்பாணத்தில் சிறப்பு பூஜை வழிபாட்டை மேற்கொண்டதாக பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் யாழ்ப்பாணத்தில் நேற்று தெரிவித்தார்.

02»



# இருண்ட வரலாறுடையவர் மத்திய வங்கியின் ஆளுநரா?

## எதிர்க்கட்சித் தலைவர் ஆவேசம்;

## சர்வதேசத்தின் நன்மதிப்பை இழக்கும் செயலெனவும் சுட்டிக்காட்டு

இலங்கை மத்திய வங்கியின் நம்பகத்தன்மைக்கு பங்கம் ஏற்படும் வகையில் இருண்ட வரலாற்றுப் பதிவுகளை கொண்ட ஒருவரை ஆளுநராக நியமிக்க அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் செயற்பாடானது, இந்த சந்தர்ப்பத்தில் சர்வதேச முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வீழ்ச்சியடைய வைக்கும் என்பதை தடுக்க முடியாது என்பதே உண்மையென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

02»

# சாலியின் பிணைமனு நீதிமன்றால் நிராகரிப்பு

மாவனெல்லை புத்தர் சிலை தகர்ப்பு விவகாரம் தொடர்பில் சந்தேக நபர்களுக்கு உதவிய குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணைமனு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றினால் நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஊடக சந்திப்பொன்றில் அசாத் சாலி தெரிவித்த கருத்துகள் தொடர்பாக சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரத்துக்கமைவாக அவருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த வழக்கு, பிரதான நீதவான் புத்திக ஸ்ரீராகல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அசாத் சாலியின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்ரி குணரத்ன நீதவானிடம் பிணைமனு கோரிக்கையை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையை அண்மித்து நில அதிர்வு ஏற்படலாம்

## ஆபத்தை முன்கூட்டியே தெரிந்துகொள்ள உபகரணங்கள் பற்றாக்குறை

*•நா.தினுஷா*

இலங்கையை அண்மித்த கடல் பரப்பில் எதிர்காலத்தில் பாரிய நில அதிர்வு ஏற்படுவதற்கான ஆபத்து இருப்பதாக சிரேஷ்ட புவியியல் விஞ்ஞான நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையை அண்மித்த நிலப் பகுதியில் பாரியளவு நில அதிர்வு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும், இந்து சமுத்திரம் மற்றும் அவுஸ்திரேலியா நிலப்பரப்புகளின் மத்தியில் விரிவடையும் இடத்தில் சில காலம் செல்லும்போது அறிகுறிகள் காண்பிக்குமென பேராதெனிய பல்கலைக்கழக புவியியல் விஞ்ஞானப் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

02»

# பாரதி கலாமன்றத் தலைவர் மணி காலமானார்



பாரதி கலாமன்றத் தலைவர் கலாபூஷணம் த. மணி கடந்த 11 ஆம் திகதி சனிக்கிழமை தனது 82 ஆவது வயதில் காலமானார். அன்னாரது நல்லடக்கம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை வத்தளை சென். ஏன்ஸ் மயானத்தில் இடம்பெற்றது.

இவர் பாரதி கலாமன்றத்தை நிறுவி கொழும்பு தலைநகரில் பல்வேறு இலக்கிய நிகழ்வுகளை தொடர்ச்சியாக நடத்தி வந்துள்ளார். மேலும், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. போன்ற அறிஞர்களின் சொற்பொழிவுகளை நடத்தியுள்ளார். பாரதியை நெஞ்சில் ஏந்திய இவர், ஒவ்வொரு வருடமும் விடாது பாரதி விழா நடத்தியுள்ளார். பாரதி பிறந்த தினத்திலேயே இவர் இறையடி சேர்ந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் தேவையற்ற விதத்தில் இராணுவத்தை பயன்படுத்தவில்லை

## ஐ.நா. ஆணையாளரின் குற்றச்சாட்டு தொடர்பில் அமைச்சர் டலஸ் கருத்து

யோ.தர்மராஜ்

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகால சட்டத்தின் ஊடாக தேவையற்ற விதத்தில் எவ்விடத்திலும் இராணுவத்தினரின் பங்களிப்பு இல்லை என்பதை உறுதியாக கூற முடியும் என அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான டலஸ் அழகபெரும தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு குறித்து ஊடகவியலாளரினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த காலங்களில் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் அது மக்களின் உரிமைகள் என்பதை கருத்தில் கொண்டு அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. குறைந்த பட்சம் பொலிஸாரினால் தண்ணீர் தாரை பிரயோகம் கூட முன்னெடுக்கப்படவில்லை. ஆனால், ஆசிரியர்களின் நாடாளுமன்றின் வளாகத்தில் போராட்டத்தை முன்னெடுத்த போது பொலிஸாரினால் பலவந்தமாக போராட்டக்காரர்கள் அழைத்துச் செல்லப்பட்டது தவிர வேறு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொலிஸாரினால் தாக்குதல்கள் நடத்தப்படவில்லை.

இதேவேளை, அவசரகால சட்டத்தில் சில திருத்தங்களை முன்னெடுத்து உணவு பொருட்கள் பகிர்வதற்கான இராணுவத்தினரை இணைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. மக்கள் என்ற ரீதியில் இதனை புரிந்துகொள்ள வேண்டும்.

தடுப்பூசி வழங்கலின் போது இராணுவத்தினர் பாரிய ஒத்துழைப்பு வழங்கியதுடன், தற்போது ஏற்பட்டுள்ள அரிசி மற்றும் நெல் பிரச்சினைகளின் போதும் அவர்கள் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளனர். ஆகவே, ஐ.நா மனித உரிமைகளின் அங்கத்துவ நாடுகளாக இருப்பதால் அவர்களின் கண்காணிப்புகளை புறக்கணிக்க முடியாது. ஆனால், நாட்டிற்குள் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் இராணுவத்தினரின் பங்களிப்பு காணப்பட்டாலும் தேவையற்ற விதத்தில் எவ்விடத்திலும் இராணுவத்தினரின் பங்களிப்பு இல்லை என்பதை உறுதியாக கூற முடியும் - என்றார்.

# முதியோர் கொடுப்பனவு 17, 18 ஆம் திகதிகளில்

## தபால் திணைக்களம் அறிவிப்பு

செப்டெம்பர் மாதத்திற்கான முதியோர் கொடுப்பனவு எதிர்வரும் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் பெற்றுக்கொடுக்கப்படும் என தபால் திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்கான வசதிகள் அனைத்து தபால் நிலையங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில், வாரத்தில் நான்கு நாட்கள் மாத்திரம் தபால் நிலையங்களை திறக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, திங்கள், செவ்வாய், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் தபால் நிலையங்கள் திறக்கப்படவுள்ளன.

இதுவரை 500 தபால் ஊழியர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், சுமார் 50 தபால் நிலையங்களின் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் கூறினார்.

இதனால் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் சுகாதார ஒழுங்கு விதிகளுக்கமைய சேவைகளை முன்னெடுக்கவுள்ளதாக தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன சுட்டிக்காட்டினார்.

# கிரிக்கெட் உலகிற்கு விடைகொடுத்த மாலிங்க



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான, யோர்க்கர் கிங் என்றழைக்கப்படும் லசித் மாலிங்க அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று (14) அறிவித்துள்ளார்.

38 வயதாகும் லசித் மாலிங்க கடந்த வருடம் மார்ச் மாதம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வினை அறிவித்தார். எனினும் தொடர்ந்தும் இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடுவதாக தெரிவித்திருந்த லசித் மாலிங்க, இன்று அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 2004ஆம் ஆண்டு இலங்கை அணியில் அறிமுகம் பெற்றுக்கொண்ட லசித் மாலிங்க இன்று வரையில் இலங்கை அணியின் நட்சத்திர வேகப்பந்துவீச்சாளர்களில் ஒருவராக திகழ்ந்து வருகிறார். லசித் மாலிங்கவின் ஓய்வுக்கு முன்னாள், இந்நாள் கிரிக்கெட் வீரர்கள் உட்பட கோடிக்கணக்கான ரசிகர்களும் தங்களுடைய வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்து வருகின்றனர்.

## இலங்கையை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் ஏற்படும் நில அதிர்வுகள் தொடர்பில் தரவுகளை பெற்றுக்கொள்வதற்கு நான்கு உபகரணங்கள் மாத்திரமே இருக்கின்றன. நாட்டில் 65 ஆயிரம் சதுர கிலோமீற்றர் வரையான தரவுகளை பெற்றுக்கொள்வதற்கு இந்த உபகரணங்கள் போதாது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரையில் கவனம் செலுத்தப்படவில்லை. இலங்கையை அண்மித்த நிலப்பரப்பில் நில அதிர்வு ஏற்படக்கூடிய காலம் மற்றும் அளவு என்பன தொடர்பில் உரிய ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டுமாயின் தேவையான உபகரண கட்டமைப்பு வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்க் கைதிகள்...

மதியரசன் துளர்ஷன் என்ற கைதியின் தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தியுள்ளார். இந்தக் கைதியின் வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிமன்றத்தில் இடம்பெறுகின்றன.

இச்சம்பவம் மூடி மறைக்கப்படுகிறது. இது குறித்து விசாரணைகள் இடம்பெறுமாயின் சாட்சி வழங்குவதற்கு சிறைச்சாலை அதிகாரிகளும் கைதிகளும் தயாராக இருக்கிறார்கள் என்றார்.

## அத்தியாவசியப்...

குறித்து ஊடகவியலாளரினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுகர்வோர் என்ற அடிப்படையில் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்வதில் பாதிப்புகள் இல்லை என்று கூறினால் அது பிழையானது.

நாடு முடக்கப்பட்டுள்ளதோடு, சில வர்த்தக நிலையங்கள் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும் என்பதை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாட்டில் தளர்வுகள் இல்லாது முற்றுமுழுதாக முடக்கம் அமுல்படுத்தப்பட்டிருந்தால் மக்கள் எந்தளவுக்கு பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருப்பார்கள் என்பது குறித்தும் நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆகவே, மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டிருக்கும் என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. அதற்கு எங்களுடைய கவலையையும் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆனால், 21 ஆம் திகதிக்கு பின்னர் இதனை சாதாரண நிலைமைக்குக் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையுள்ளது.

நாட்டிலுள்ள பொருளாதார நிலையங்களில் பொருட்களைக் கொண்டுவந்து பகிர முடியாத நிலைமை ஏற்பட்டதை ஊடகங்களின் ஊடாக காண முடிந்தது. எனினும், முடக்கப்பட்டிருக்கும் காலப்பகுதியில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும். அதற்கு நாங்கள் எங்களுடைய கவலையையும் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆகவே, நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நிலைமையை சாதாரண நிலைமைக்கு கொண்டுவர முடியும்.

இதேவேளை, மக்கள் தொகையில் 50 வீதமானவர்களுக்கு இரு தடுப்பூசிகளையும் வழங்கிய 16 நாடுகளுக்குள் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த நாடுகளில் பெரும்பாலான நாடுகள் தடுப்பூசி உற்பத்தி செய்யும் நாடுகளாக இருக்கின்றன. இவற்றில் இலங்கையும் உள்ளடங்கியுள்ளது எங்களுக்கு கிடைத்த வெற்றியாகும்.

அதேபோன்று, ஊரடங்கு காலத்தில் வேலைகளுக்குக் கூடச் செல்லாது வீட்டிலேயே முடங்கியிருந்தவர்கள் கூட வீரர்களாவர். சுகாதார துறை, இராணுவம் மற்றும் அரசாங்கமும் பாரிய ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. இதேபோன்று, எதிர்வரும் வாரங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கினால் அத்தியாவசியப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை மற்றும் அதற்கு அப்பால் ஏற்படும் பிரச்சினைகளையும் கட்டுப்படுத்த முடியும் - என்றார்.

## இருண்ட வரலாறுடையவர்...

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நிதிக்கொள்கையை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதே மத்திய வங்கியின் பிரதான செயற்பாடாகும். வங்கிக் கட்டமைப்பை ஒழுங்கு முறைப்படுத்துகின்ற மற்றும் மொத்த நிதிச் செயற்பாட்டின் கட்டமைப்பை ஒழுங்கமைக்கின்ற பொறுப்பு மத்திய வங்கிக்கே காணப்படுகின்றது. அரச நிதி தொடர்பில் தீர்மானங்களை எடுக்க வேண்டியது மத்திய வங்கியேயாகும். இவற்றை அரசியல் தலையீடுகள் இன்றியே மேற்கொள்ள வேண்டும். இந்த நாட்டின் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள அஜிட் நிவாட் கப்ரால் ஒரு புறம் பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதோடு அதே அரசாங்கத்தின் நிதி இராஜாங்க அமைச்சராக இருந்தார். மத்திய வங்கி ஆளுநர் நியமனம் தொடர்பான சர்வதேச தரப்படுத்தலுக்கு அமைவாக அவரை இந்தப் பதவிக்கு நியமிக்காமல் இருப்பதற்கு இது முக்கிய காரணமாக இருக்கின்றது.

எமது நாட்டின் கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற போராட்டத்தில் சிக்கிக்கொண்டிருக்கின்ற நிலையில், இந்த பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுக் காணப்படுவதோடு அந்நிய செலாவணி தட்டுப்பாடு காணப்படுகின்ற இந்த நிலையில் அஜிட் நிவாட் கப்ராலை மத்திய வங்கி ஆளுநராக பிரேரித்து அவரை நியமிக்கின்ற போது சர்வதேச நிதிச் சமூகத்திற்கு எமது நாடு குறித்தும் எமது நாட்டின் பொருளாதாரம் குறித்தும் குழப்பம் ஏற்படுவதோடு நம்பிக்கையீனத்தையும் வலுவாக உருவாக்குவதாகவும் அமையும்.

இதற்கு முன்னர் அஜிட் நிவாட் கப்ரால் மத்திய வங்கியின் ஆளுநராக செயற்பட்ட காலத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பல மில்லியன் அமெரிக்க டொலர்களை இழக்கச் செய்த ஹெஜின் உடன்படிக்கை மற்றும் எமது நாட்டுக்கு பல மில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பீடுகளை ஏற்படுத்திய முறிகள் விநியோகம் போன்ற குற்றச்சாட்டுகளால் பாரிய கறுப்புப் புள்ளியை ஏற்படுத்தியிருக்கின்றார். தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் அறக்கட்டளை நிதியம் ஆகியவற்றின் பணத்தை முறையற்ற விதத்தில் கையாண்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றது. அவர் மத்திய வங்கியின் ஆளுநராக செயற்பட்ட காலத்தில் முன்வைக்கப்பட்ட அனைத்து கோப் அறிக்கைளிலும் இது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு முறிகள் தொடர்பான தடயவியல் அறிக்கையில் அஜித் நிவாட் கப்ராலின் செயற்பாடுகள் குறித்து குளறுபடிகளே காணப்படுகின்றன. தற்போது அமெரிக்காவில் 12 வருட காலமாக சிறைத்தண்டனை அனுபவிக்கின்ற அமெரிக்கப் பிரஜையான சுபேரி என்பவருடன் மேற்கொள்ளப்பட்ட 6.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பணத்தை சட்டத்திற்கு புறம்பாக கையாண்ட விதம் குறித்து கப்ரால் மீதும் அப்போதைய மத்திய வங்கிக்குழு மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது.

தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்சி பெற வேண்டுமாக இருந்தால் சர்வதேசத்தின் நன்மதிப்பை பெற்று சர்வதேசம் நம்பிக்கை கொள்கின்ற ஒருவரை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிப்பதே அல்லாமல் தனிப்பட்ட உறவுகள் மற்றும் நெருங்கிய பழக்கமுடையவர் என்பதற்காக தலைகளை மாற்றுவதன் ஊடாக மாற்றம் ஒன்றும் வரப்போவதில்லை.

நம்பிக்கைக்கு பாரியளவில் மோசடி செய்து இருண்ட யுக வரலாற்றைக் கொண்டுள்ள ஒருவரை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாக இருந்தால் அது மொத்த நாட்டு மக்களுக்கும் இழைக்கின்ற துரோகம் என மக்களுக்கு பொறுப்புக்கூறுகின்ற எதிர்க்கட்சி என்ற வகையில் சுட்டிக்காட்டுவதோடு அதற்கு எமது பாரிய எதிர்ப்பையும் வெளியிடுகின்றோம். அத்தோடு அஜித் நிவாட் கப்ராலை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கக் கூடாது என்பதையும் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

## மலையக மக்கள்...

ஆணையாளர் மிச்செல் பச்லே கூறியுள்ளமையை தமிழ் முற்போக்கு கூட்டணி வரவேற்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது,

தற்போதைய கூட்டத்தில் வாய்மொழி அறிக்கையை வெளியிட்டுள்ள மனித உரிமை ஆணையர், 2022 மார்ச் 49ஆம் கூட்டத்தில், எழுத்து மூல அறிக்கையை வெளியிடுவார்.

அதன் பின் 2022 ஜூன் 50ஆவது கூட்டம் கடந்து போகும். அதையடுத்து, 2022 செப்டெம்பரில் கூடும் 51 ஆவது கூட்டத்தில், இலங்கை அரசின் அதுவரையிலான “மனித உரிமை நடத்தை” தொடர்பில், ஆய்வு செய்து, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய சிபாரிசுகளை, ஐ.நா. மனித உரிமை ஆணையர் மிச்செல் பச்லே வெளியிடுவார். இந்த இரண்டு வருட கூட்டங்களும் முக்கியமானவை.

உண்மையில் 2009 இறுதி யுத்தத்தின் போது, ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் உள்ளக செயற்பாட்டை கொண்ட ஐ.நா. அலுவலகம், வன்னியில் இருந்து பொறுப்பற்ற முறையில் வெளியேறி தனது கடமையில் இருந்து தவறியது. இதுபற்றி ஒரு உள்ளக ஆய்வு அறிக்கை அவ்வேளையில் ஐ.நா.வுக்கு தயாரிக்கப்பட்டு உரையாடலுக்கு உள்ளானது. இந்த கசப்பான உண்மை எமக்கு தெரியும்.

எனவே இலங்கை வாழ் தமிழ் மக்கள் பற்றி ஐ.நா. சபைக்கு, ஒரு கடப்பாடு இருக்கிறது. ஆகவே அது இன்றுவரை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தொடர்கிறது. அதை நாம் மனதில் கொண்டு இவ்விவகாரத்தை முன்நகர்த்த வேண்டும்.

இம்முறை, தமிழ்க் கட்சிகள் ஐ.நா. மனித உரிமை ஆணையருக்கு, வெவ்வேறாக கடிதங்கள் எழுதியமை பற்றி மென்மேலும் பேசி முரண்பட கூடாது. உண்மையில் இப்படி பல கடிதங்கள் சென்றமை நல்லதே என அவற்றை நாம் சாதகமாக பார்க்க வேண்டும்.

அடுத்த வருட அவைகளின் போது தமிழ் கட்சிகள் ஒருமுகமாக ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தை அணுகலாம். அதற்கான முன்தயாரிப்பு பணிகளை இப்போதே ஆரம்பிக்க வேண்டும்.

மனித உரிமை கூட்டங்களின் போது மாத்திரம் திடீரென எழாமல், எவ்வேளையிலும் விழிப்புடன் செயற்பட வேண்டும். எதிர்வரும் ஆண்டில் அனைத்து தமிழ்க் கட்சிகளும் இணைந்து பயணிக்கலாம் என நான் நம்புகிறேன்.

இறுதிப்போரில் சொல்லொண்ணா துன்பங்களை சந்தித்த வடக்கு, கிழக்கு தமிழ் உடன்பிறப்புகளை பற்றியே ஐ.நா. மனித உரிமை ஆணையம் ஆரம்பத்தில் பெரிதும் பேசியது. இப்போது இலங்கையில் ஒட்டுமொத்த சிவில் சமூக செயற்பாடுகள், இராணுவ மயமாக்கல் மற்றும் முஸ்லிம் சகோதரர்கள் மீதான ஒடுக்கு முறை, கத்தோலிக்க மக்களை குறிவைத்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஆகியவை பற்றியும் ஐ.நா. மனித உரிமை ஆணையர் பேசுகிறார்.

இப்பின்னணியில், அரச கொள்கைகளால் ஒடுக்குமுறைக்கு உள்ளாகியுள்ள, மலையக தமிழர்கள் மீதான அரசியல், சமூக, பொருளாதார, கலாசார உரிமை மீறல்களையும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அவதானத்துக்கு முன்வைக்க உத்தேசித்து நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

## கொரோனாவிலிருந்து....

நாடு கொரோனா தொற்றிலிருந்து விடுபட வேண்டி பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஞானசார தேரர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் ஒரு விசேட பூசை வழிபாட்டில் கலந்து கொள்வதற்காக வந்திருக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் உள்ள சிறப்பான விஷ்ணு ஆலயத்தினை தெரிவுசெய்து நயினாதீவு விகாராதிபதி மற்றும் யாழ்ப்பாண நாகவிகாரை விகாராதிபதி ஆகியோருடன் இணைந்து வந்திருக்கின்றேன்.

நாங்கள் ஒரு எதிர்பார்ப்போடு இங்கு வந்திருக்கின்றோம். தற்போதைய நிலைமை அனைவருக்கும் தெரிந்த விடயம். இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் நோய்த் தாக்கத்தின் காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சிலர் நோயினால் பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகிறார்கள். அது சிங்களவராக இருக்கட்டும் தமிழராய் இருக்கட்டும், எந்த இனத்தவராயினும் அனைத்து இனத்தை சேர்ந்தவர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

சிலர் ஒரு நேர உணவுக்கு கூட வழியில்லாமல் உள்ளார்கள். அதேபோல் சிலருக்கு வேலை இல்லாத பிரச்சினை காணப்படுகின்றது. அத்தோடு இந்த நோய் தொற்றுக்குள்ளானோர் சிகிச்சை பெறுவதற்கு அவதிப்படுகிறார்கள். எந்த இனத்தவராக இருந்தாலும் அவர்கள் அனைவரும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

கடவுள் மீதுள்ள நம்பிக்கையின் காரணமாக குறிப்பாக பௌத்த மதத்தில் நாம் பின்பற்றும் ஒரு விதிமுறையை போல இந்து மதத்தில் உள்ள ஆகம விதிமுறையை இணைத்து இந்த தொற்றில் இருந்து நாடு விடுபட கடவுளிடம் வேண்டி ஒரு விசேட பிரார்த்தனை மேற்கொண்டுள்ளோம்.

தற்பொழுது பௌத்த, இந்து, இஸ்லாம் என்ற பேதத்தை மறந்து அனைவரும் இணைந்து இந்த கொரோனா நோயிலிருந்து விடுபடுவதற்காக ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

இலங்கையில் நான்கு பிரதான விஷ்ணு ஆலயங்கள் காணப்படுகின்றன. அதில் ஒன்றான யாழ்ப்பாணம் பொன்னாலை வரதராஜ பெருமாள் விஷ்ணு ஆலயத்தில் இந்த விசேட பூஜை வழிபாட்டை மேற்கொண்டுள்ளோம். கடவுளிடம் மன்றாடி இந்த விசேட பூசை வழிபாடு மேற்கொண்டுள்ளோம்.

ஏனைய இடங்களிலும் இந்த பூசை வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு என்னுடன் இணைந்து ஏனைய விகாராதிபதிகளும் இந்த நிகழ்வில் இணைந்திருந்தார்கள்.

இந்த கொரோனா நோயின் தாக்கமானது கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் ஆகிய அனைத்து விடயங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது இலங்கையில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதிலிருந்து விடுபடுவதற்கு நாம் ஒரு முயற்சியாகவே அதாவது உலகத்தில் உள்ள மக்கள் இந்த நோயிலிருந்து விடுபட வேண்டும், மக்கள் துன்பத்தில் இருந்து விடுபட வேண்டியே இந்த விஷேட பூசை வழிபாட்டினை ஏற்பாடு செய்துள்ளோம்.

அரசியல், இன, மத, வேறுபாடு இன்றி அனைத்து மக்களும் நோயிலிருந்து விடுபட இந்த வழிபாட்டினை மேற்கொண்டுள்ளோம். இந்த வழிபாட்டின் மூலம் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என நம்புகிறோம் என்றார்.

## ஐ.நா. ஆணையரின்...

மூலம் எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை தனது மண்ணில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை ஒழித்தது. நாம் எமது மக்களின் நலனுக்காக சமாதானம், பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை மீட்டெடுத்துள்ளோம். எமது ஜனநாயக மரபுகளை நாம் உறுதியாகப் பேணி வந்தோம் - மிகவும் அண்மையில் இடம்பெற்ற 2019ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2020ஆம் ஆண்டில் நாடாளு மன்றத் தேர்தல்களில், அதிக அளவிலான வாக்காளர்களின் பங்கேற்புடன் வழக்கமான இடைவெளியில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

குணப்படுத்துதல் என்ற கண்ணோட்டத்தில் மோதலுக்குப் பிந்தைய மீட்பு நடவடிக்கைகளைக் கையாள்கின்றோம்.

மிகவும் அண்மையில், தீவிரமான பயங்கரவாதக் குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட 16 விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. மோதலுக்குப் பிந்தைய கண்ணிவெடி அகற்றல், புனரமைப்பு மற்றும் மீள்குடியேற்றத் திட்டங்களின் வெற்றியானது, தேசிய நல்லிணக்கத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது.

பேரழிவுகளை ஏற்படுத்தும் கொவிட்-19 தொற்றுநோயின் நாளாந்த சவால்கள் இருந்த போதிலும், உள்நாட்டு செயன்முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தை நான் முன்னிலைப்படுத்துகின்றேன்:

காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் அதன் முக்கிய செயற்பாடாக, ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து காணாமல் போனவர்களின் பட்டியலை இறுதி செய்கின்றது.

இழப்பீட்டு அலுவலகம் இந்த ஆண்டு 3ஆயிரத்து 775 கோரிக்கைகளை செயலாக்கியுள்ளது.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் அதன் 8 அம்ச செயற்றிட்டத்தைத் தொடர்கின்றது.

தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் ஆணையை நிறைவேற்றுகின்றது.

நிலையான அபிவிருத்தி இலக்கு 16 இன் கீழான வழிநடத்தல் குழுவொன்று சமாதானம், நீதி மற்றும் வலுவான நிறுவனங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்கும், சர்வதேச விதிமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப கொண்டுவரவும் அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இம்மாத இறுதியில் அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள வழக்குகளை விசாரணை செய்யவும், இதுபோன்ற வழக்குகளை விரைவாக சமாளிப்பதற்கான பரிந்துரைகளை வழங்கவும் ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குகளை விரைந்து தீர்ப்பதும் நடைபெற்று வருகின்றது.

பொறுப்புக்கூறல் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும், முந்தைய ஆணைக் குழுக்களின் பரிந்துரைகளை மறுபரிசீலனை செய்வதற்காகவும் உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட்டது. விசாரணை ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தது. இறுதி அறிக்கை அடுத்த 06 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்படும்.

நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கும் நுண்ணறிவுகளைப் பெறுவதற்கும், ஆதரவைப் பயன்படுத்துவதற்கும் நாங்கள் சிவில் சமூகத்துடன் தீவிரமான ஈடுபாட்டைப் பராமரிக்கின்றோம்.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் குற்றவாளிகள் மீது இலங்கை தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து, அனைத்து விதமான சட்ட நடைமுறைகளையும் பின்பற்றி வருகின்றது. பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதிலும், அனைத்து மதங்களைச் சார்ந்த இலங்கையர்களைப் பாதுகாப்பதிலும் எப்போதும் போல நாம் விழிப்புடன் இருப்போம்.

தீர்மானம் 46/1 ஆல் நிறுவப்பட்ட எந்தவொரு வெளிப்புற முன்முயற்சிகளுக்கான முன்மொழிவை நாங்கள் நிராகரிக்கும் அதே நேரத்தில், சம்பந்தப்பட்ட விடயங்களில் உள்நாட்டு செயன்முறைகள் கையாளப்படுகின்றன. தீர்மானம் 30/1 இனால் நாங்கள் அனுபவித்தபடி இது எமது சமூகத்தைத் துருவப்படுத்திவிடும். மனித உரிமைகள் பேரவை அதன் ஸ்தாபகக் கொள்கைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட நாட்டின் ஒத்துழைப்பு இல்லாமல் தொடங்கப்பட்ட வெளிப்புற முயற்சிகளால் அந்த நாட்டினால் குறிப்பிட்ட இலக்குகளை அடைந்து கொள்ள முடியாது என்பதுடன், அது அரசியல்மயமாக்கலுக்கு உட்படுத்தப்படும். குறிப்பாக உலகின் பல பகுதிகளில் மனிதாபிமான மற்றும் ஏனைய ஆக்கபூர்வமான நோக்கங்களுக்காக அவை அவசரமாகத் தேவைப்படும்போது, இந்த முயற்சியில் செலவிடப்பட்ட வளங்கள் தேவையற்றவை.

கொவிட்-19 தொற்றுநோயின் தற்போதைய மற்றும் அழுத்தமான சவால்களின் கீழ், சமூக வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதை அரசாங்கத்தின் அடிப்படைக் கடமையாக நாங்கள் கருதுகின்றோம். எமது சவால்களை ஒப்புக்கொள்வதில் நாம் வெளிப்படையாக இருக்கின்றோம், பொறுப்பான மற்றும் ஜனநாயக அரசாங்கமாக, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகள், சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான முழு அளவிலான பிரச்சினைகளில் உறுதியான முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றார்.

# இன்றைய ராசி பலன்

நாள்: 15.09.2021 புதன்கிழமை – ஆவணி 30

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: பூராடம்** அ.கா 5.55 - 16.09.2021 அதிகாலை 4.56 வரை

**யோகம்: சௌபாக்கியம்** அ.கா 3.24 - 16.09.2021 அதிகாலை 12.53 வரை

**திதி: பூர்வ பட்ச நவமி** காலை 11.17 வரை

**பூர்வ பட்ச தசமி** காலை 11.17 -16.09.2021 காலை 09.36 வரை

**முற்கரணம்: கௌலவம்** காலை 11.17 வரை

**பிற்கரணம்: தைதுலம்** காலை 11.17 - இரவு 10.25

**சுப நேரங்கள்**
மாலை 3.06 - 4.36

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
பிற்பகல் 12.07 - 1.38

**குளிகை காலம்**
காலை10.36-பி.ப12.07

**எமகண்ட காலம்**
காலை 7.35 - 9.06

**துர் முகூர்த்தம்**
காலை11.41- பி.ப12.30

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி
நற்பவி நற்பவி

**மேடம்**
தடைப்பட்ட வேலைகள் நிறைவேற துவங்கும். தம்பதியரிடையே உறவில் அன்பு அதிகரிக்கும். வணிக பயணங்களில் நன்மை கிடைக்கலாம். வழக்கு விடயங்களில் சாதகமான நிலை தோன்றும்.

**ரிஷபம்**
குடும்ப விடயங்களில் வேற்று மனிதர்களின் தலையீடு, வீட்டில் யாரிடமும் சண்டையிடும் நிலை இரண்டையும் தவிர்ப்பது நன்மை. பயணங்களில் கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் தீமைகளை குறைக்கும். சந்திராஷ்டமம்: ரோகிணி நட்சத்திரத்திற்கு அ.கா 12.12- இரவு 11.10, மிருகசீரிடம் நட்சத்திரம் பாதம் 1/2க்கு இரவு 11.10- 16.09.2021 காலை 10.43 வரை.

**மிதுனம்**
காதலர்களுக்கு திருமண சுபங்கள் ஏற்படலாம். வேலைகளில் உங்கள் ஆலோசனை அங்கீகாரம் பெறப்பட்டு நிறைவேறும். பொருட்களின் தேவைகள் நிறைவேறலாம்.

**கடகம்**
வேலைகளின் முயற்சிகளில் நன்மை கிடைக்கலாம். வாகன கொள்வனவு ஏற்படலாம். பணிகளில் மேல்நிலையில் உள்ளோரின் ஆதரவு கிடைக்க பெறலாம்.

**சிம்மம்**
பெற்றோருடனும் பிள்ளைகளுடனும் உறவு மற்றும் அன்பை அதிகப்படுத்துவது நன்மை. பணிகளில் முயற்சிகளால் அதிக நன்மை உண்டாகலாம். இல்லற சூழ்நிலை மகிழ்ச்சி தரும்.

**கன்னி**
உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் இன்று கிடைக்காமல் இருக்கலாம். பிள்ளைகளின் விடயங்களில் சிறிய கவனம் தேவைப்படலாம்.

**துலாம்**
தன்னம்பிக்கை அதிகரிப்பால் செயல்கள் நல்ல நிலையில் நிறைவேறும். வாழ்க்கைத்துணையுடன் மகிழ்ச்சியான நாளாக அமையலாம். இறைவணக்கம் அதிக நன்மை தரும்.

**விருச்சிகம்**
தேவையற்ற செலவுகள் ஏற்படலாம். ஆவண விடயங்களில் கவனம் தேவைப்படலாம். வணிகத்தில் சாதாரண நிலைமை ஏற்படலாம்.

**தனுசு**
அனைத்து வேலைகளும் நல்ல முறையில் நிறைவேறும். வணிக இலாபங்கள் அதிகரிக்கும். அரசியலில் இருப்பவர்களுக்கு நன்மை கிடைக்கலாம்.

**மகரம்**
வேலைத்தளங்களில் சக பணியாளர்களுடன் பிரச்சினைகளை தவிர்ப்பது நன்மை. செயல்களில் மென்மையாக இருப்பது மேன்மை. வாழ்க்கைத் துணையுடன் சகிப்புத்தன்மை தேவைப்படலாம்.

**கும்பம்**
பிள்ளைகளின் விடயங்களில் மகிழ்ச்சி உண்டாகும். சமூக தொண்டுகள் உங்களால் செய்யப்படலாம். பணியில் வெளிப்படை தன்மையால் மதிப்பு கிடைக்கப் பெறலாம்.

**மீனம்**
பண நிலைமை சீராகும். காணி/வீடு விற்கும் அல்லது வாங்கும் தொழிலில் நிதி நிலை மேம்படும். துணிச்சலான விடயங்களை தவிர்ப்பது நன்மை.

# வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் ஞானசார தேரர்







நாட்டில் நிலவிவரும் கொரோனா தொற்று நோய் நிலைமை நீங்க வேண்டி சிறப்பு யாகப் பூஜை நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. நாடுபூராகவுமுள்ள நான்கு விஷ்ணு ஆலயங்களில் இந்த சிறப்பு வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்திலும் இந்த வழிபாடுகள் நேற்று இடம்பெற்றன.

கொவிட் - 19 வைரஸ் பெருந்தொற்றிலிருந்து விடுபடுவதற்கு பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நேற்று சிறப்பு யாகம் வளர்க்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்றன.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய முதன்மைக் குரு சோமஸ்கந்த குருக்கள் மற்றும் நயினை நாகதீபம் விகாராதிபதி மீகா வதுலே சிறீ விமல ஆகியோர் ஏற்பாடு செய்த இந்த வழிபாட்டில் கலகொட அத்தே ஞானசார தேரர் கலந்துகொண்டார்.

# நாட்டில் கொரோனா பாதிப்பு செப்டெம்பரில் வீழ்ச்சியடையும்

## அமைச்சர் ரமேஷ் பத்திரண நம்பிக்கை

**யோ.தர்மராஜ்**

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் கொரோனா நோயாளர்களும் மரணங்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சிறப்பான தடுப்பூசி செயற்றிட்டத்தின் இறுதி கட்டத்திற்கு வருகைத் தந்துள்ளதால் செப்டெம்பர் மாத இறுதியில் கொரோனா நோயாளர்கள் மற்றும் மரணங்களில் எதிர்பார்த்த வீழ்ச்சி ஏற்படும் என அமைச்சரவை இணை பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதில் மாற்றங்கள் ஏற்படுமாக இருந்தால் அதனை எதிர்வரும் நாட்களில் அறியத் தருகின்றோம்.

எனினும், அரசாங்கம் சுகாதாரத் துறையின் ஆலோசனைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது போன்று, சாதாரண மக்களின் பொருளாதார பிரச்சினைகள் குறித்து ஆராய வேண்டும். இதனாலேயே அரச மற்றும் தனியார் துறையினருக்கு அத்தியாவசிய சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு சட்டத்தால் இலட்சக்கணக்கான மக்கள் பொருளாதார பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். இதனாலேயே அவர்களுக்காக சில தளர்வுகளைக் கொண்டு பொருளாதார நிலையங்களை திறந்து அவர்களின் பொருளாதாரத்தைக் கொண்டுச் செல்வதற்கும் விவசாயத்துறை மற்றும் இறக்குமதி துறைக்கும் அனுமதி வழங்கியுள்ளது. ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் கொரோனா நோயாளர்களும் மரணங்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சிறப்பான தடுப்பூசி செயற்றிட்டத்தின் இறுதி கட்டத்திற்கு வருகைத் தந்துள்ளோம். செப்டெம்பர் மாத இறுதியில் கொரோனா நோயாளர்கள் மற்றும் மரணங்களில் எதிர்பார்த்த வீழ்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

# கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 4,88,482 | 61,402 | 4,15,649 | 2,560 | 11,431 |

# காய்ச்சலுக்கு பரிகாரம் செய்ய சென்ற யுவதி ஆலயத்துக்குள்ளேயே உயிரிழப்பு



நீண்ட நாட்களாக இருந்து வந்த நோய்க்கு இறையருள் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கிராமபுர ஆலயமொன்றுக்கு சென்று பரிகார பூஜையில் ஈடுபட்டிருந்த 21 வயது யுவதி ஒருவர் ஆலயத்தின் உள்ளேயே விழுந்து உயிரிழந்துள்ளார். இந்த கவலைக்குரிய சம்பவம் பண்டுவஸ்நுவர, குரடிஹேன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்த யுவதிக்கு இருந்த இந்த நோயை நீண்ட நாட்கள் குணப்படுத்த முடியாமல் இருந்ததால் தோசம் ஏற்பட்டிருக்கலாமென கருதி அதனை நீக்கிக் கொள்வதற்காக யுவதியின் பெற்றோர் அவருடன் குரடிஹேன பிரதேசத்திலுள்ள ஆலயமொன்றுக்கு சென்றுள்ளனர். அங்கு சென்று பரிகார பூஜையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது மயக்கமடைந்த நிலையில் கதிரையிலிருந்து நிலத்தில் விழுந்துள்ளார்.

அதனையடுத்து பெற்றோர் உள்ளிட்டோர் யுவதியை ஹெட்டிபொல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போதே அவர் உயிரிழந்திருந்ததாக ஹெட்டிபொல பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெட்டிபொல, குருட்ஹேன பிரதேசத்தைச் சேர்ந்த எச்.எம். மருஷிகா மதுஷானி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த யுவதியின் பிரேத பரிசோதனைகள் குளியாபிட்டிய ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றன. அந்த பரிசோதனையில் யுவதிக்கு வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டிருந்ததாகவும் நரம்பு தொகுதியில் ஏற்பட்ட வீக்கம் காரணமாக நுரையீரல் செயலிழந்து உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# வவுனியாவில் 69 பேருக்கு கொவிட் - 19 தொற்று உறுதி

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 69 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட நோயாளர்களுடன் தொடர்பை பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகளிலும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளினதும் அறிக்கை சில நேற்று வெளியாகின.

அந்த அறிக்கையின் அடிப்படையில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனா தொற்று பரவலடைந்துள்ள நிலையில் 69 பேருக்கு மேலும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றுக்குள்ளானவர்களை கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கவும் அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# வவுனியாவில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை

## மேலதிக அரசாங்க அதிபர் அறிவிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கான எந்தவித தட்டுப்பாடும் இல்லையென மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களின் நிலைமை தொடர்பில் நேற்றுமுன்தினம் வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கு எந்தவித தட்டுப்பாடும் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. சீனி, மா என்பவற்றுக்கு ஒரு சில நாட்கள் தட்டுப்பாடு இருந்தாலும், அது குறித்து உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டு மாவட்டத்திற்கு தேவையான மா, சீனி என்பன கொண்டு வரப்பட்டுள்ளன. அவை கூட்டுறவுச் சங்கங்கள், சதொச விற்பனை நிலையங்கள் ஊடாகவும் ஏனைய தனிப்பட்ட வியாபார நிலையங்கள் ஊடாகவும் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் அத்தியாவசியப் பொருட்கள் தொடர்பில் குழப்பமடையத் தேவையில்லை. இதற்கு மேலதிகமாக, தற்போது 2021, 2022 ஆண்டு கால போக நெற்செய்கை ஆரம்பிக்கப்படவுள்ளமையால் விவசாயிகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அவர்கள் தடைகளின்றி விவசாயம் செய்வதற்காக நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

# ஒரு இலட்சம் சம்பளம் பெறுவோருக்கு 5வீத பந்துலவின் தனிப்பட்ட கருத்து

## அமைச்சர் டலஸ் விளக்கம்

**யோ.தர்மராஜ்**

நாட்டில் ஒரு இலட்சம் ரூபா சம்பளம் பெற்றுக்கொள்வோருக்கு 5 வீதம் வரியாக அறவிட வேண்டும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளமையானது அவருடைய தனிப்பட்ட கருத்தாகும் என அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான டலஸ் அழகபெரும தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்த கருத்து குறித்து ஊடகவியலாளரினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு இலட்சம் ரூபா சம்பளம் பெற்றுக்கொள்வோருக்கு 5 வீதம் வரியாக அறவிட வேண்டும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளது அவருடைய தனிப்பட்டக் கருத்தாகும். இது தொடர்பாக குறைந்த பட்சம் அமைச்சரவையில் பேச்சுவார்த்தைக் கூட நடத்தப்படவில்லை.

அவர் தனிப்பட்ட வகையில் அவ்வாறான கருத்துகளை தெரிவித்துள்ளதோடு, அது தனிப்பட்ட யோசனையாகும். எனினும், அமைச்சர் பந்துல குணவர்தனவை விமர்சனத்திற்குள்ளாக விட முடியாது. இதேவேளை, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரச நிதியை செலவழித்து வரிகளை வீணடிப்பதற்கு எந்தவொரு தீர்மானத்தையும் நாங்கள் எடுக்க மாட்டோம் - என்றார்.

## அக்கரைப்பற்றில் அடுத்த மாதம் புத்தகக் கண்காட்சி

அக்கரைப்பற்றில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 29, 30 மற்றும் 31 ஆகிய தினங்களில் புத்தகக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இந்த கண்காட்சி தொடர்பான அதன் பிரதான ஏற்பாட்டாளர் சிராஜ் மஷ்ஹூர் தலைமையில் கலந்துரையாடலொன்று அண்மையில் இடம்பெற்றது. இந்த கலந்துரையாடலில் கண்காட்சிக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இக்கண்காட்சியினூடாக இளைஞர், யுவதிகள் மட்டத்திலும் சிறுவர்கள் மத்தியிலும், வாசிப்புப் பழக்கத்தையும் புத்தகக் கலாசாரத்தையும் ஊக்குவிப்பது தொடர்பிலும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதுடன் போட்டி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

# மக்கள் குவிந்தமையால் பூவரசன்குளம் தடுப்பூசி நிலையத்தில் குழப்பநிலை

(வவுனியா நிருபர்)

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் தடுப்பூசி செலுத்த சென்ற இடத்தில் மக்கள் குவிந்தமையால் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் இரண்டாம் கட்ட கொரோனா தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைவாக பூவசரன்குளம் வைத்தியசாலையில் சாளம்பைக்குளம், பம்பைமடு, பூவரசன்குளம், வேலன்குளம், செக்கட்டிபுலவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன.



கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஒரு நாளுக்கு 500 பேருக்கு மட்டுமே தடுப்பூசிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் அறிவுறுத்தல்களை மீறி 500 பேருக்கு அதிகமாக பூவரசன்குளம் வைத்தியசாலைக்கு முன்பாக சுகாதார நடைமுறைளைப் பின்பற்றாது தடுப்பூசி பெறுவதற்காக ஒன்று கூடினர்.

இதனைக் கட்டுப்படுத்தி சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு வழிபடுத்த முற்பட்ட போது கிராம அலுவலர் மற்றும் கடமையில் நின்ற உத்தியோகத்தர்களுக்கும் மக்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன.

இதனால் அப்பகுதியில் சுமார் 30 மணி நேரம்வரை பதற்றமான நிலை காணப்பட்டதுடன், இராணுவத்தினரும், கடமையிலிருந்த உத்தியோகத்தர்களும் குவிந்த மக்களை வெளியேற்றி நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, செப்டெம்பர் 15ஆம் திகதி, புதன்கிழமை

# பந்து இப்போது அரசின் கைகளில்!

இலங்கையில் மனித உரிமை தொடர்பிலும் பொறுப்புக்கூறல் தொடர்பிலும் சர்வதேச நாடுகளின் கவனம் மீண்டும் திரும்பியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை குறித்து அதன் ஆணையாளர் மிச்செல் பச்லே தெரிவித்துள்ள கருத்துகள் கவனம் செலுத்தப்படவேண்டியன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 48 ஆவது கூட்டத் தொடர் நேற்று முன்தினம் ஜெனீவாவில் ஆரம்பமாகியது.

இலங்கையானது மனித உரிமைகள் பாதுகாப்பு விடயத்தில் மேலும் ஆக்கபூர்வமாக பணியாற்றவேண்டுமென மிச்செல் பச்லே அம்மையார் கடுந்தொனியில் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பில் வாய்மூல அறிக்கை சமர்ப்பித்த அவர் இலங்கை குறித்து காரசாரமான விடயங்களை குறிப்பிட்டதுடன் சில விடயங்களுக்கு ஆதரவையும் வெளியிட்டிருந்தார்.

குறிப்பாக இலங்கையானது மனித உரிமைகள் பாதுகாப்பு விடயத்தில் முன்னேற்றத்தை காட்டவில்லை என்பதே அவரது அறிக்கையின் சாரமாக இருந்தது. அவர் தனது அறிவிப்பில் மேலும் கூறியதாவது,

“இலங்கையில் கடந்த மாதம் நடைமுறைக்கு வந்த அவசர கால விதிமுறைகள் பரந்துபட்டவை. சிவில் நிர்வாகத்தின் மீது இராணுவத்தின் செல்வாக்கை இது மேலும் அதிகரிக்கின்றது.

இலங்கை எதிர்கொண்டுள்ள சமூக, பொருளாதார சவால்கள் முக்கியமானவை. இராணுவமயமாக்கல் மற்றும் பொறுப்புக்கூறல் இன்மையால் அடிப்படை உரிமைகள் மீது ஏற்படுகின்ற மோசமான தாக்கத்தை இது புலப்படுத்துகின்றது.

கண்காணிப்பு அச்சுறுத்தல், நீதித்துறை துன்புறுத்தல், மனித உரிமை ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், காணாமல் போனவர்கள் துன்புறுத்தப்படுவது ஆகியன தொடர்ந்தும் நீடிக்கின்றன. இந்த நடவடிக்கைகள் மாணவர்கள், கல்விமான்கள், மதத்தலைவர்களை நோக்கி விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்துவது கவலைக்குரியது. இந்தச் சட்டத்தை பயன்படுத்துவதற்கு உடனடியாக தடை விதிக்க வேண்டும். காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகம் பாதிக்கப்பட்ட மக்களிடத்தில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் போன்றவற்றில் நம்பகத்தன்மை முன்னேற்றம் ஏற்படுவதை உறுதி செய்வதற்காக மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகள் இலங்கை குறித்து உன்னிப்பான கவனத்தை செலுத்த வேண்டும்.

இராணுவமயப்படுத்துதல், தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதல் ஆகியவற்றினால் ஏற்படும் மோசமான பாதிப்புகள் குறித்து கவனிக்கப்படுதல் வேண்டும். அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் துன்புறுத்தப்படுவது உடன் நிறுத்தப்படவேண்டும்.

சட்டத்தின் ஆட்சியின் நிலை, முக்கிய சம்பவங்கள் குறித்து விசாரணையின்மை, ஆதாரங்களை சேகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகள் இலங்கை தொடர்பில் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும்.

“முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிற்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டமை கவலைக்குரியது. முன்னாள் கடற்படைத் தளபதி – கடற்படை பேச்சாளர் ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டமையும் கவலைக்குரியது” என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கையில் பொறுப்புக்கூறலை நிலைநாட்டும் விதத்தில் ஐ.நா.வுடன் சேர்ந்து பணியாற்ற உறுதிபூண்டிருப்பதாகவும், அதற்குத் தேவையான நிறுவன ரீதியான சீரமைப்புகளைச் செய்ய தயாராக இருப்பதாகவும், இலங்கையின் ஜனாதிபதி கடந்த ஜூனில் விடுத்த அறிவிப்பை வரவேற்கிறோம். இதுதொடர்பில் காத்திரமான, மிகத் திடமான நடவடிக்கைகளை யதார்த்தத்தில் இலங்கை அரசு செயல்முறையாக நடைமுறைப்படுத்துவதை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம் எனவும் பச்லே குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் தொடர்ச்சியான மனித உரிமை மீறல்கள் குறித்து ஒவ்வொரு வருடமும் ஐ.நா. மனித உரிமை பேரவையில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு முறையும் இலங்கை அரசாங்கம் அதற்கென தற்காலிக ஏற்பாடுகளை மேற்கொள்வது வழமையாகியிருக்கிறது.

ஆயினும், பொறுப்புக்கூறல் தொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும் செயற்பாடுகளையும் சர்வதேச நாடுகள் உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கின்றன. ஐ.நா. ஆணையாளரின் சில குறிப்பீடுகள் இதற்குச் சான்று பகர்கின்றன. குறிப்பாக ஒரு இலட்சம் ஆதாரங்கள் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஒவ்வொரு அரசாங்கமும் ஐக்கிய நாடுகள் சபையிடம் உறுதிமொழிகள் வழங்குகின்றபோதிலும் அவற்றை முன்னெடுப்பதில்லை. மனித உரிமைகள் தொடர்பில் தற்போதைய அரசாங்கத்தின் மீது சர்வதேசத்தின் மத்தியில் ஒரு சந்தேகப் பார்வை உண்டு. அதனைத் தீர்க்க வேண்டுமாயின் ஏற்கனவே உறுதியளிக்கப்பட்டதன் பிரகாரம் பொறுப்புக் கூறலுக்கான காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

பந்து இப்போது அரசின் கைகளில்!

# அமைச்சரவை தீர்மானங்கள்

## 13.09.2021 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01. மெய்யறிவின் பண்புகளின் ஆற்றல் பற்றிய அளவிடலும் மேம்படுத்தலும்: இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் புதிய அணுகுமுறைகள் தொடர்பான ஆய்வுக் கருத்திட்டம்

மெய்யறிவின் பண்புகளின் ஆற்றல் பற்றிய அளவிடலும் மேம்படுத்தலும் தொடர்பாக இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் புதிய அணுகுமுறைகள் பற்றிய கூட்டு ஆய்வுக் கருத்திட்டத்தை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த ஆய்வுக் கருத்திட்டம் கொழும்பு பல்கலைக்கழகம், பிலிப்பைன்ஸ் டீ லா சால் பல்கலைக்கழகம், கனடா வோர்ட்டலு பல்கலைக்கழகம், ஐக்கிய அமெரிக்க வேக் பொரஸ்ட் பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்களால் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த ஆய்வுக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவும், அதற்காக குறித்த பல்கலைக்கழகங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கும் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 02. மீள்பிறப்பாக்க எரிசக்தி அபிவிருத்தியின் கொள்கை ரீதியான இலக்கை பிரகடனப்படுத்தல்

சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கைப் பிரகடனத்திற்கமைய 2030 ஆம் ஆண்டளவில் எமது நாட்டின் மின்சக்தித் தேவையில் அதிகளவு மீள்பிறப்பாக்க எரிசக்தி மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய எமது நாட்டின் ஒட்டுமொத்த மின்சக்தித் தேவையின் 70 வீதமானவை 2030 ஆம் ஆண்டளவில் மீள்பிறப்பாக்க எரிசக்தி மூலங்கள் மூலம் பூர்த்தி செய்வதற்கும், 2050 ஆம் ஆண்டாகும் போது எமது நாட்டின் மின்னுற்பத்தியில் முழுமையாக காபன் நீக்கப்பட்ட நிலைமையை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளது. குறித்த கொள்கைச் சட்டத்தில் 2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க இலங்கை மின்சக்தி சட்டம் மற்றும் குறித்த சட்டத்தின் திருத்தங்களுக்கமைய இலங்கை மின்சார சபையால் குறைந்த செலவில் நீண்டகால மின்னுற்பத்தி திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். குறித்த மின்னுற்பத்தி திட்டத்தைத் தயாரிப்பதற்காக குறித்த சட்டத்தின் (5) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மின்சக்தி அமைச்சர் பொதுக் கொள்கை வழிகாட்டியொன்று மின்சார சபைக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, குறித்த வழிகாட்டியை வெளியிடுவதற்காக மின்சக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 03. தற்போது அடையாளங் காணப்பட்டதும், ஆனாலும் பாவனைக்குட்படுத்தாத கனிமப் பொருட்களின் பயன்பாட்டுக்கான பொறிமுறையொன்றைத் தயாரித்தல்

எமது நாட்டில் காணப்படுவதும், தற்போது அடையாளங் காணப்பட்டுள்ளதுமான கனிம வளங்களில் பொருளாதாரப் பெறுமதி கொண்ட கனிமங்கள் கீழ்வரும் 04 பிரதான பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

. சக்திவள கனிமங்கள்
. இரும்பு உலோக மற்றும் கலப்பு உலோகங்கள் கொண்ட கனிமங்கள்
. இரும்புத்தாது அல்லாத கனிமங்கள்
. உலோகமல்லாத கனிம வகையைச் சார்ந்த கனிமங்கள்

அவற்றில், இல்மனைற், சர்கோன், ரூடைல் மற்றும் காரியம் போன்ற கனிமப் பொருட்களை அகழ்தல், சுத்திகரித்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் போன்றன தற்போது கனிம மணல் கம்பனி மற்றும் கஹட்டகஹ கிரஃபயிட் லங்கா லிமிட்டட் போன்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வருவதுடன், தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகாரசபை மற்றும் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண ஆராய்ச்சி நிலையம் போன்றன இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. குறித்த கனிமங்கள் தவிர்ந்த ஏனைய கனிமப் பொருட்களின் பாவனை தொடர்பாக அரச தலையீடுகள் போதுமானளவு இடம்பெறுவதில்லை என்பது தெரியவந்துள்ளது. அதனால், குறித்த கனிமப் பொருட்களை முறையான வகையில் பொருளாதார ரீதியில் பயன் பெறுவதற்காக வேலைத்திட்டமொன்றை மேற்கொள்வதற்காக, குறித்த கனிமப் படிமங்கள் காணப்படும் பிரதேசங்கள், குறித்த படிமங்களின் அளவு மற்றும் அவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளக் கூடிய உற்பத்திகள் தொடர்பாக விரிவான ஆய்வுக் கற்கையொன்றை மேற்கொள்வதற்காக துறைசார் நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்கும், குறித்த குழுவின் பரிந்துரைகளுக்கமைய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகவும் கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




### 04. குடியியல் வழக்குக் கோவை 88(2) ஆம் உறுப்புரையை திருத்தம் செய்தல்

பிரதிவாதியின் சிரத்தையின்மையை கருத்தில் கொண்டு அவருக்கு எதிராக நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்பொன்று, 14 நாட்களில் குறித்த சிரத்தையின்மைக்கான நியாயமான காரணங்கள் ஏதும் இருந்தமையை முறைப்பாட்டாளருக்கு அறிவித்தலுடன் கூடியதாக நீதிமன்றத்திற்கு பிரதிவாதியால் சமர்ப்பிக்கப்படும். வேண்டுகோளின் அடிப்படையில், நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்பை மாற்றிக் கொள்வதற்கான ஏற்பாடுகள் குடியியல் வழக்குக் கோவையில் உள்வாங்கப்பட்டுள்ளது. குறித்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தி பிரதிவாதியொருவருக்கு தாமதப்படுத்தும் தந்திரோபாயத்தைப் பயன்படுத்தவும், முறைப்பாட்டாளரின் நியாயமான உரித்தைக் கொண்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு இயலுமை உள்ளமை கண்காணிக்கப்பட்டுள்ளது. அதனால் குறித்த பாதகமான நிலைமையைத் தவிர்ப்பதற்கு இயலுமான வகையில் குடியியல் வழக்குக் கோவை 88(2) ஆம் உறுப்புரையை திருத்தம் செய்வதற்காக 01.02.2021 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலம் அரசியலமைப்பு உறுப்புரைகளுக்கு ஏற்புடையதானதென சட்டமா அதிபரால் உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 05. குடியியல் வழக்குக் கோவை (101 ஆம் அத்தியாயம்) திருத்தம் செய்தல்

இறுதி விருப்புறுதி ஆவணம் அல்லாத, சான்றுப்படுத்தப்பட்ட ஏதேனுமொரு காணி உறுதி அல்லது ஆவணமொன்றை மேலோட்டமாகப் பார்க்கும் போது அது சரியான வகையில் சான்றுப்படுத்தியுள்ளமை தெரியவந்தால் மற்றும் மேன்முறையீடு செய்யும் போதும் அல்லது தொடர்ந்தும் மேன் முறையீடு செய்யும் போதும் கையொப்பமிடல் அல்லது அதன் போலித்தன்மை குறிப்பாக குற்றப்பகர்வுக்கு உள்ளாக்கப்பட்டு பிரச்சினையாக மேற்கொண்டு வராவிட்டால் அல்லது நீதிமன்றத்திற்கு அவ்வாறான சாட்சிகள் தேவைப்படின் மாத்திரம் அல்லது எழுதி கையொப்பமிடல் மற்றும் அவற்றின் உண்மைத்தன்மையை நிரூபிப்பதற்காக முறையான சாட்சிகளை முன்னிலைப்படுத்தத் தேவையில்லை எனும் ஏற்பாடுகள் குடியியல் வழக்குக் கோவைக்கு (101 ஆம் அத்தியாயம்) அறிமுகப்படுத்தல் பொருத்தமானதென நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ள குடியியல் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான குழு பரிந்துரை செய்துள்ளது. அதற்கமைய, குறித்த பணிகளுக்குத் தேவையான ஏற்பாடுகளைத் தயாரிப்பதற்காக குடியியல் வழக்குக் கோவைக்கு தேவையான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்காகவும், அதற்காக சட்ட வரைஞர் சட்டமூலத்தை தயாரிப்பதற்கும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 06. புதிய களனிப் பாலத்திலிருந்து ராஜகிரிய ஊடாக வெளிச்சுற்று அதிவேக நெடுஞ்சாலையின் அத்துருகிரிய இடைமாறல் வரைக்குமான தூண்களிலான அதிவேக நெடுஞ்சாலையை அமைத்தல் - நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கான ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல்

இந்நெடுஞ்சாலையை அமைப்பதற்கான ஒப்பந்தம் திட்டமிட்டு, நிர்மாணித்து, நிதி வழங்கி, நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒப்படைத்தல் எனும் அடிப்படையில் (DBFOT), M/S CHINA HARBOUR ENGINEERING CORPORATION) இற்கு வழங்குவதற்கு 2021.05.24 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 03 வருடங்களில் குறித்த அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள நெடுஞ்சாலையின் தரம் மற்றும் குறித்த காலப்பகுதியில் நிர்மாணிப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு வேலைகளைக் கண்காணிப்பதற்காக சுயாதீன பொறியியலாளர் ஒருவரைக் கொண்ட ஆலோசனை நிறுவனமொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டியுள்ளது. குறித்த ஆலோசனை நிறுவனத்தின் சேவை வழங்குநராக வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்படல் வேண்டும். அதற்கமைய, அதற்கான முறையான பெறுகையைக் கையாண்டு பொருத்தமான நிறுவனத்தைத் தெரிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 07. திமோர் - லெஸ்டே (கிழக்குத் திமோர்) அரசுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தல்

திமோர் - லெஸ்டே (கிழக்குத் திமோர்) அரசாங்கம், இலங்கையுடன் இராஜதந்திர தொடர்புகளை முறையான வகையில் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான விருப்பத்தை இலங்கைக்கு அறிவித்துள்ளது. இந்தியா, சீனா, ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட ஆசிய நாடுகள் பல தற்போது அந்நாட்டுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. கிழக்குத் திமோருடன் இராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாகவும் அதேபோல் இராஜதந்திர தளங்களில் இலங்கையின் தலையீடுகளில் அந்நாட்டின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதும் முக்கியமாகும். அதற்கமைய, அந்நாட்டுடன் முறையான இராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 08. 2021 சிறுபோக நெற் கொள்வனவு வேலைத்திட்டம்

2021 சிறுபோக அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், விவசாயிகளின் நெல் அறுவடையை போட்டி விலையில் கொள்வனவு செய்யும் நோக்கில் நாடு ஒரு கிலோ 55 ரூபாவுக்கு நெல் சந்தைப்படுத்தல் சபை மூலம் கொள்வனவு செய்வதற்கும், அவ்வாறு கொள்வனவு செய்யும் நெல்லை அரிசியாக்கி சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக நுகர்வோருக்கு நியாயமான விலையில் விற்பனை செய்வதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது)**

# அதிபர் - ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் உபகுழுவின் பரிந்துரைக்கு அமைச்சரவை இணங்கவேண்டும்

## மாணவர்களின் எதிர்காலத்துக்காக ஒன்றிணையுமாறும் ஓமல்பே தேரர் கோரிக்கை

அதிபர் - ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட உபகுழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளாமல் அமைச்சரவை செயற்படுவது ஏற்றுக்கொள்ளமுடியாத விடயமாகும். அந்த குழுவின் தீர்மானத்துக்கமைய 33 சதவீத கொடுப்பனவை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ராமாஞ்சிய மகா சங்கத்தின் தெற்கு பிரதேசங்களுக்கான பிரதான ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஓமல்பே சோபித தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாணவர்களின் எதிர்காலத்தை பற்றி சிந்தித்து அதிபர்கள் சகலரும் ஓரணியில் திரள வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிபர்களுக்கான தரங்களுடைய அதிபர்கள் சங்க ஒன்றியத்தின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அமைச்சரவை உபகுழுவின் தீர்மானத்தில் 33 சதவீதத்துக்கு ஆதரவளிப்பதாக அதிபர்கள், ஆசிரியர்கள் சங்கம் இணங்கியுள்ளன. அதற்கு அரசாங்கமும் பணிந்து செல்ல வேண்டும். கடந்த இரண்டு வாரங்களாக அதிபர் ஆசிரியர்கள் சங்கத்தினர் நிதி அமைச்சரை சந்திக்க முயற்சித்து வருகின்றனர். ஆனால், இதுவரையில் அந்த சந்திப்புக்கு நிதி அமைச்சரிடமிருந்து சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இன்று 80 சதவீதமான ஆசிரியர்கள் பெண்களாகவே இருக்கிறார்கள். இது பாரதூர பிரச்சினையாகும். ஆண்கள் ஆசிரியர் தொழிலை பெரும்பாலும் தெரிவு செய்வதில்லை. இரண்டாம் மூன்றாம் சமூக வகுப்புகளைச் சேர்ந்தவர்களே ஆசிரியர் தொழிலை தேர்ந்தெடுப்பார்கள் என்பதே சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாக காணப்பட்டு வருகின்றது. அதன் காரணமாகவே ஆண்கள் ஆசிரியர் தொழிலை தேர்ந்தெடுக்காமல் வேறு தொழில்களை தெரிவு செய்கின்றனர்.

ஆசிரியர்களில் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு அமைச்சரவை உபக்குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டிருந்தது. அமைச்சர் விமல் வீரவன்ச உள்ளிட்டோரின் பங்கேற்புடன் நியமிக்கப்பட்ட இந்த உபகுழுவில் ஆசிரியர்களுக்கான சம்பளப் பிரச்சினையில் மூன்றில் ஒரு பகுதிக்கு தீர்வு வழங்க முடியுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இதுதொடர்பில் ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்களுடன் எவ்வித கருத்து பரிமாற்றமும் இடம்பெறவில்லை. இருந்தபோதிலும் அந்த யோசனை அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, உப குழு ஒப்புக்கொண்ட மூன்றிலொரு பகுதியை வழங்க முடியாதென்றும் நான்கிலொரு பங்கை செலுத்துவதாக அமைச்சரவை அறிவித்துள்ளது. இது உண்மையில் அசாதாரண விடயம் மாத்திரமல்ல, முரண்பாடான முடிவாகும்.

அமைச்சரவை உபகுழுவின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால் எதற்காக உபக்குழு என்றவொன்றை நியமித்தார்கள் என்பது தெரியவில்லை. உப குழு என்பது பிரச்சினைக்கான தீர்வு வழங்கும் சபையை போன்றது. அதன் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளாமல் அதனை மாற்றியமைக்க முயற்சிக்கிறார்கள் என்றால் உபகுழுவுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்றே கருத வேண்டும்.

உபகுழுவில் தீர்மானிக்கப்பட்ட 33 சதவீத தொகையை செலுத்த அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும். அதிபர்கள் ஆசிரியர்களின் வேண்டுகோள் இதனூடாக முழுமையடையா விட்டாலும், உபகுழு ஒப்புக்கொண்ட தொகையையாவது செலுத்தி இந்த பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டும். அமைச்சரவை, உபகுழுவின் பரிந்துரையை அவமதிக்கும் வகையில் தொடர்ந்தும் செயற்படக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாடுகளுக்கு செல்பவர்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து தேவையான தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியும்

## சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ

(சிவா ஸ்ரீதரராவ்)

வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கு அரசாங்கத்தின் ஊடாக அந்தந்த நாட்டில் பரிந்துரைக்கப்பட்டுள்ள தடுப்பூசிகளை இராணுவ வைத்தியசாலையின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

கேகாலை மாவட்ட கொரோனா தடுப்பு குழுக் கூட்டம் நேற்று நிகழ்நிலை ஊடாக இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தொழில் மற்றும் வேறு நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளுக்கு செல்வதற்காக பல்வேறு தடுப்பூசிகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கு தேவையான தடுப்பூசிகளை உரிய ஆவணங்களை சமர்ப்பித்து இலங்கை இராணுவ வைத்தியசாலையின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.



இதன்போது கருத்து தெரிவித்த கேகாலை மாவட்ட பிரதேச சுகாதார பணிப்பாளர் சமில விஜேகோன், கேகாலை மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் மற்றும் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை ஓரளவு குறைவடைந்து வருவதாக தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், தாரக்க பாலசூரிய, கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்ரமசிங்க, கேகாலை மாவட்ட செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய உட்பட சுகாதார அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மவுஸாக்கலை பகுதி ஆறுகளில் கழிவுகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு



(செ.தி.பெருமாள்)

மத்திய மலைநாட்டில் கடந்த சில வாரங்களாக பெய்துவரும் கனமழை காரணமாக, நீர்த்தேக்கங்களுக்கு நீரை வழங்கும் கங்கைகள், ஓடைகளில் இருந்துவரும் கழிவுப் பொருட்கள் மூலம் நீர்த்தேக்கங்களில் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் கழிவுப் பொருட்கள், அதன் கரையோரப் பகுதிகளில் அதிகளவு வந்து குவிகின்றதாக நீர்மின் நிலைய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மவுஸாக்கலை நீர்த்தேக்கத்தில் இருந்து நீரை வழங்கும் மறே ஓயா, காட்மோர் ஓயா, நல்லதண்ணீர் ஓயா, சாமிமலை ஓயா மற்றும் சிற்றாறுகள் மவுஸாக்கலை நீர்த்தேக்கத்தில் சங்கமிக்கும் பகுதிகளிலேயே இவ்வாறான கழிவுப் பொருட்கள் நிறைந்து காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நீரோடைகளிலும் நீர்த்தேக்கத்திற்கு நீர் வழங்கும் ஆறுகளிலும் பொதுமக்கள் கழிவுகளை விசுவதால் அவை நீரை அசுத்தப்படுத்துவதுடன் நீர்த்தேக்கத்தில் வாழும் மீன் மற்றும் ஏனைய உயிரினங்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டு வருகின்றது. இவ்வாறான கழிவுகளை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் அதனை எதிர்வரும் வாரங்களில் மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், நீர்த்தேக்கத்தில் சேரும் குப்பைகளை அகற்ற கடற்படையினர், இலங்கை மின்சார சபையின் பாதுகாப்புப் பிரிவினர், மவுஸாக்கலை இராணுவ முகாமை சேர்ந்த இராணுவத்தினர் மற்றும் அதிரடிப்படையினர், மஸ்கெலியா பொலிஸார், மீன்பிடித் துறையினர் என அனைவரையும் இணைத்து இந்தக் கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இராணுவ பஸ் - முச்சக்கரவண்டி மோதி விபத்து

(வவுனியா நிருபர்)

வவுனியா, தாண்டிக்குளம் கொக்குவெளி இராணுவ முகாமுக்கு முன்பாக நேற்று முச்சக்கர வண்டியும் இராணுவத்துக்கு சொந்தமான பஸ்ஸூம் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியா நகரிலிருந்து ஏ - 9 வீதியில் பயணித்த இராணுவ பஸ் கொக்குவெளி இராணுவ முகாமுக்கு திரும்ப முற்பட்டபோது எதிர்த்திசையில் வவுனியா நோக்கி பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்து இடம்பெற்றவுடனே அவ்விடத்திலிருந்த இராணுவத்தினர் விபத்துக்குள்ளான பஸ்ஸை இராணுவ முகாமுக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுத்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த முச்சக்கரவண்டி சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியாவில் வாகன போக்குவரத்து அதிகரிப்பு



(நுவரெலியா நிருபர்)

ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும் அத்தியாவசிய தேவைகள் தவிர அநாவசியமாக மக்கள் நுவரெலியா நகருக்குள் பிரவேசிப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இதன் முதல் காரணமாக அத்தியாவசிய மற்ற வியாபார நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளமை அமைந்துள்ளது. அதிகளவிலான வாகனங்கள் நகருக்கு வருவதனை கட்டுப்படுத்துவதற்காகவும், அத்தியாவசியமின்றி நகருக்கு வருபவர்களை எச்சரித்து திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# யாழ்ப்பாணம் பிள்ளையார் கோயில் சுவரிலுள்ள வர்ணம் தொடர்பில் சர்ச்சை

## அது ஒலிம்பிக் நிறம் என்கிறார் அங்கஜன் இராமநாதன்





பிள்ளையார் கோயில் குள பாதுகாப்பு சுவருக்கு பூசப்பட்ட வர்ணம் பௌத்த வர்ணம் அல்ல ஒலிம்பிக் வர்ணம் என தன்னிடம் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி தெரிவித்ததாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாகவுள்ள பிள்ளையார் குளம் புனரமைப்பு செய்யப்படும் நிலையில் குளத்தை சுற்றி புதிதாக கட்டப்பட்டிருக்கும் பாதுகாப்பு சுவர்களில் பௌத்த கொடியை ஒத்த வர்ணம் தீட்டப்படுவதாக சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இது தொடர்பில் விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் பிள்ளையார் கோயில் குளத்தினை புனரமைக்கும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக வர்ணப்பூச்சுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதில் பூசப்பட்டுள்ள வர்ணங்கள் பௌத்த கொடியினை பிரதிபலிப்பதாக ஏற்படுத்தப்பட்டுள்ள சர்ச்சை தொடர்பில், நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டேன்.

அதற்கு, குறித்த நிறங்கள் ஒலிம்பிக் கொடியினை பிரதிபலிக்கும் வகையில் பயன்படுத்தப்படுவதாகவும் அவை அருகிலுள்ள முன்னணி ஆரம்ப பாடசாலையின் மாணவர்களை கருத்தில் கொண்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

எனவே, இவ்விடயத்தில் வீண் சர்ச்சைகளை தவிர்க்குமாறும் சுயலாப அரசியலை முன்னெடுக்க முயற்சிக்கும்போது பௌத்த கொடியில் பச்சை நிறம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதையும் கருத்தில் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம் என தெரிவித்தார்.

### வர்ணப்பூச்சு வேலைகள் இடைநிறுத்தம்

அதேவேளை, வர்ண சர்ச்சை காரணமாக குளத்திற்கு நேரடியாக சென்ற யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் வர்ண பூச்சு பணிகளை இடைநிறுத்துமாறு பணித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்திகள் தொடர்பில் கள ஆய்வுகளை மேற்கொள்வதற்காக கடந்த வாரம் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறித்த குளத்தின் அபிவிருத்தி பணிகளை பார்வையிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



திருகோணமலை மற்றும் புல்மோட்டை பகுதிகளில் பிடிக்கப்பட்ட 'சாலை' மீன்கள் குளிரூட்டப்பட்ட நிலையில், லொறிகளில் கொண்டுவரப்பட்டு பின்னர் அவை உடப்பு பகுதிகளில் கருவாடாக்கப்படுகின்றன. சாலை மீன் கருவாடு உடப்பு பகுதியில் கிலோ 350ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.
(படங்கள் : உடப்பு நிருபர்)

# நாடுகளின் தேசிய கொடிகளை அடையாளம் கண்டு சிறுமி அனத் ஜிதாஹ் சாதனை



ஆசிய நாடுகளின் தேசிய கொடிகளை மிக வேகமாக அடையாளம் கண்ட சாதனையாளராக குட்டி சிறுமி பாத்திமா அனத் ஜிதாஹ் ஆசிய புத்தகத்தில் இடம் பிடிப்பதற்கு தெரிவாகியுள்ளார்.

இவர் நிந்தவூரை சேர்ந்தவர் என்பதுடன் தந்தை தொலைத்தொடர்பு பொறியியலாளராகவும் தாய் முன்பள்ளி ஆசிரியராகவும் கடமையாற்றுகின்றனர். இரு பிள்ளைகளில் இவரே மூத்தவர். இன்னும் 03 மாதங்களில் இவருக்கு 05 வயது பூர்த்தியாகின்றது.

ஆசிய புத்தகத்தின் ஆசிரியர் குழு இவரின் தனித்துவ திறமையை பரிசீலித்து கிராண்ட்மாஸ்டர்" விருது வழங்கி கௌரவித்ததுடன் ஆசிய புத்தகத்தில் இவரின் சாதனையை பதிவிடுவதற்கு தீர்மானம் எடுத்துள்ளது. இவர் 48 ஆசிய நாடுகளின் தேசிய கொடிகளை 24 செக்கன்கள் மற்றும் 07 நிமிட செக்கன்களில் அடையாளம் கண்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனை தொகுதி பொறுப்பாளரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை பணிப்பாளர் குழு உறுப்பினருமான றிஸ்லி முஸ்தபாவின் சார்பாக அனத் ஜிதாஹின் இல்லத்துக்கு இவரின் ஊடக செயலாளர் ரோஷன் முஹம்மட் நேற்று நேரில் சென்று பாராட்டி 'டெப் ஒன்றை அன்பளிப்பு செய்தார்.



இதேநேரம் சமூக சேவைக்கான நட்புறவு ஒன்றியத்தின் நிந்தவூர் இணைப்பாளர் யூ. எல். எம். சஜித் மற்றும் செயற்பாட்டாளர்கள் பி. எம். பவாய்ஸ், எம். அஹ்சன் அஹமட் ஆகியோரும் நேரில் வந்து பாராட்டி பரிசு வழங்கி கௌரவித்தார்கள்.

இதன்போது சாதனை சிறுமியின் தந்தை எம். எல். எம். ஜெசிம், தாய் யூ. கே. பாத்திமா ஜௌஹரா ஆகியோர் கூறுகையில்,

அனத் ஜிதாஹ் மிகுந்த புத்தி கூர்மையும், நிறைந்த ஞாபக சக்தியும், சிறந்த அவதானமும் உள்ளவர். எந்த விடயத்தையும் ஒரு தடவையிலேயே கிரகித்து கொள்வார். நாடுகளின் தேசிய கொடிகளை அடையாளம் காண்பதில் இயல்பாகவே அவருக்கு நாட்டம் இருந்து வந்தது. அனைத்து நாடுகளின் தேசிய கொடிகளையும் அவரால் மிக வேகமாக அடையாளம் கண்டு சொல்ல முடியும். கின்னஸ் சாதனைக்கும் விண்ணப்பித்துள்ளோம்.

இவரிடம் இன்னமும் பல திறமைகள் உள்ளன. நாடுகளின் தலை நகரங்கள் மற்றும் தலைவர்களையும் அடையாளம் கண்டு வேகமாக சொல்கின்றார். ஆங்கில சொற்களை வாசிக்கின்றார். எண்களை கூட்டி சொல்கின்றார். ஏராளமான சிறுவர் கதைகளை நினைவில் வைத்து சொல்கின்றார் என்று தெரிவித்தார்கள்.

# அமைச்சர் என்ற போர்வையில் அலி சப்ரி செய்யும் சகல விடயங்களும் முஸ்லிம் மக்கள் மீதான அநியாயங்கள்

## நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை இஸ்லாத்துக்கு எதிராக செயற்படுவதை உடன் நிறுத்துமாறு மௌலவி முகம்மட் மிப்லால் கோரிக்கை

(மாளிகைக்காடு நிருபர்)

அமைச்சர் அலி சப்ரி கொலைகாரர்களுக்காகவும், போதைப் பொருள் வியாபாரிகளுக்காகவும், பாதாள உலகத் தலைவர்களுக்காகவும் வாதிட்டு ஹராம் ஹலால் பாராது வருமானத்தை ஈட்டி வந்ததாகவும், கடந்த ஒரு வருடமாக முஸ்லிம் அமைச்சர் ஒருவர் அமைச்சரவையில் இருக்கிறார் என்ற விடயத்தை பயன்படுத்திகொண்டு இலங்கை முஸ்லிம்களுக்கு ஏராளமான அநியாயங்களை செய்வதாகவும் முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பின் தலைவர் மௌலவி ஐ.எம். முகம்மட் மிப்லால் குற்றம்சாட்டியுள்ளார்.



சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் விளக்கமளித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இஸ்லாமிய இயக்கங்களை பொய்க் குற்றச்சாட்டின் பெயரில் தடை செய்தது உட்பட தனக்கு விருப்பமில்லை என்பதற்காக, புர்கா மற்றும் நிகாபை தடை செய்தது, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பல அப்பாவிகளுக்கு எதிராக பொய்யான குற்றப்பத்திரிகை சமர்ப்பித்து அவர்களை பயங்கரவாதிகளாக்கியது, முஸ்லிம் தனியார் சட்டத்தை குர்ஆன், ஹதீசுக்கு முரணாக மறுசீரமைப்புக்கு சிபாரிசு செய்தது, 16 வயதிற்கு உட்பட்டவர்கள் மதரஸாக்களுக்கு அனுமதிக்கக் கூடாது என்ற சட்டத்தை அமைச்சரவையில் முன்மொழிந்தது என பல்வேறு செயற்பாடுகளை முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக அமைச்சர் அலி சப்ரி செய்துள்ளார்.

அத்துடன் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லாவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அமைச்சர் பதவி வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்த நிலையில் அதனை அவருக்கு வழங்க விடாமல் ஜனாதிபதி ஊடாக தடை செய்ததும் அலி சப்ரியே.

அமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்றம் சென்றது மற்றும் அமைச்சரானது முஸ்லிம்களது வாக்குகளால் அல்ல. ஆனால், முஸ்லிம்களுக்கு அவரினூடாக நன்மைகள் எதுவும் நடக்கும் என்பதை நாம் எதிர்பார்க்கவும் இல்லை. அவர் அவ்வாறு செய்யவும் மாட்டார்.

ஆனால், முஸ்லிம்களுக்கு எதிரான, இஸ்லாத்துக்கு எதிரான சட்டத் திட்டங்களை அமுல்படுத்துவதையும் அதற்கு ஆதரவளிப்பதையும் அவர் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும். மேலும் இன்னும் பல சதிகளுடனும், திட்டங்களுடனும் இஸ்லாத்துக்கு எதிரான ஐரோப்பிய நிறுவனங்களின் யூரோவிற்கும், டொலருக்கும் அடிமையாகி இதுபோன்ற அநியாயங்களை செய்து கொண்டிருக்கும் அலி சப்ரியை நாங்கள் அல்லாஹ்விடமே பொறுப்பு சாட்டுகிறோம் என்றும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஆறு நாள் சிசுவாக மீட்கப்பட்ட குழந்தைக்கு 11 மாதங்கள் பூர்த்தி

## காதுகுத்து வைபவத்தை நடத்தி தாதியர்கள் மகிழ்ச்சி கொண்டாட்டம்





(திருகோணமலை)

திருகோணமலையில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட ஆறு நாள் சிசுவுக்கு நேற்று முன்தினத்துடன் 11 மாதங்களை பூர்த்தியாகியுள்ள நிலையில், கந்தளாய் வைத்தியசாலை தாதியர்கள் அந்த குழந்தைக்கு காதுகுத்து வைபவத்தை நடத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பிறந்து ஆறு நாட்களான சிசுவொன்று சில மாதங்களுக்கு முன்னர் கைவிடப்பட்ட நிலையில் மிட்கப்பட்டுள்ளது. இவ்வாறு மீட்கப்பட்ட சிசு திருகோணமலை சிறுவர் இல்லமொன்றினால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.


சில தினங்களுக்கு முன்னர் குழந்தை திடீர் சுகயீனமடைந்திருந்த நிலையில், குழந்தைக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ள சுகாதாரப் பிரிவினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த பரிசோதனையில் குழந்தைக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனையடுத்து குழந்தை கடந்த ஒன்பது நாட்களாக கந்தளாய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்துள்ளதுடன் நேற்று முன்தினம் இந்த குழந்தை பிறந்து சரியாக பதினொரு மாதங்கள் நிறைவடைவதாக வைத்தியசாலை அனுமதி அட்டையில் பதிவிடப்பட்டுள்ளது.

இக் குழந்தையின் நலனில் அக்கறை கொண்ட கந்தளாய் வைத்தியசாலை, ஏழாம் இலக்க நோயாளர் பிரிவுக்கு பொறுப்பான தாதியர்கள் 8 பேர் ஒன்றிணைந்து கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட இக்குழந்தைக்கு காது குத்தும் நிகழ்வை மகிழ்ச்சியுடன் கொண்டாடியுள்ளனர்.

இந்நிகழ்வை கண்டு கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் ஏனைய நோயாளர்களும் மகிழ்ச்சியுடன் தமது வாழ்த்துகளை பகிர்ந்துக் கொண்டுள்ளனர்.

# முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரபின் நினைவேந்தல் நிகழ்வு நாளை



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அல்ஹாஜ் எம்.எச்.எம்.அஷ்ரபின் 21ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளை 16ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் தலைமையில் சூம் தொழில்நுட்பத்தினூடாக இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் சிரேஷ்ட சட்டத்தரணி நிசாம் காரியப்பர், கவிஞரும் இந்திய திரைப்பட நடிகருமான வ.ஐ.ச.ஜெயபாலன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் இந்ழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தவுள்ளனர்.





மட்டக்களப்பு மாவட்டத்தில் வீடு வீடாகச் சென்று 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் மற்றும் சுகாதாரத்துறையினர் இணைந்து நேற்று முன்தினம் முன்னெடுத்திருந்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.

(படங்கள்: மட்டக்களப்பு நிருபர்)

# காரைதீவுக்கு ஆறு மேம்பாட்டு உதவியாளர்கள் நியமனம்!



(மாளிகைக்காடு நிருபர்)

அத்தியாவசிய சேவை திட்டத்துக்கமைய காரைதீவு பிரதேச செயலக அத்தியாவசிய சேவைகள் ஒருங்கிணைப்பாளருக்கான மேம்பாட்டு உதவியாளர்களாக பட்டதாரி பயிலுனர்கள் ஆறு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காரைதீவு பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் இந்த நியமனங்களை வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன், அம்பாறை மாவட்ட செயலகத்தின் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரி ஹாஜா முஹம்மத் நபார் மற்றும் பிரதேச செயலக பட்டதாரி பயிலுனர்களும் கலந்து கொண்டனர்.

# யாழிலுள்ள வளம் குறைந்த பாடசாலைகளுக்கு தொலைபேசிகள், கணனிகள் வழங்கி வைப்பு



டிஜிட்டல் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் அவுஸ்திரேலியாவில் இயங்கி வரும் தொண்டு நிறுவனமான வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்திலுள்ள வளம் குறைந்த பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் தொலைபேசிகளும் தலா 5 கணனிகளும் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

அதற்கமைய, யா/குடத்தை கரையூர் அ.த.க. பாடசாலை, யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியா சாலை, யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு தலா 5 கணனிகளும் யா/சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம், யா/ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஸ்மார்ட் தொலைபேசிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

கொரோனா பாதுகாப்பு சுகாதார வழிகாட்டலுக்கமைய நடைபெற்ற இந்த நிகழ்வுகளுக்கு பிரதம அதிதியாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொண்டார்.

# 80 ஆயிரம் கிலோ நெல்லை அரிசியாக்கி அநுராதபுரம் சதொச - கூட்டுறவுகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை

(அநுராதபுரம் நிருபர்)

அநுராதபுரம் மாவட்டத்தில் கைப்பற்றப்பட்ட 80ஆயிரம் கிலோ நெல்லினை அரிசியாக்கி சதொச விற்பனை நிலையத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் நுகர்வோர் அதிகார சபை அலுவலகத்தின் பொறுப்பதிகாரி பீ.சீ.ஏ.பி.பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அநுராதபுர மாவட்டத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் நுகர்வோர் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது பெருந்தொகையான நெல் மூடைகள் கைப்பற்றப்பட்டிருந்தன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஒரு தொகை நெல்லை அரிசியாக்கி அநுராதபுரத்திலுள்ள சதொச விற்பனை நிலையங்கள் மற்றும் கூட்டுறவு கடைகளுக்கு விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்திலுள்ள சில அரிசி ஆலை உரிமையாளர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டினை அடுத்து அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு அரிசியினை வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்.

இதன் மூலம் நுகர்வோருக்கு தேவையான அரிசியினை நியாயமான விலைக்கு வழங்க முடியும். நுகர்வோர் அதிகார சபையில் பதிவு செய்யாத நெல் களஞ்சியசாலைகள் மற்றும் அரிசி ஆலைகளுக்கு சொந்தமான களஞ்சியசாலைகளை தேடி அநுராதபுர மாவட்டத்தில் தொடர்ந்தும் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊரடங்கை மீறிய ஐவருக்கு கொரோனா



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறியவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் ஐவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.கிரிசுதன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோட்டைமுனை பொது சுகாதாரப் பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தலைமையில் மட்டக்களப்பு பொலிஸாருடன் இணைந்து நேற்று காலை முதல் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது ஊரடங்கு உத்தரவை மீறி வீதிகளில் அநாவசியமாக பயணிப்போர், ஊரடங்கு விதிமுறையினை மீறி வியாபார நிலையங்களை திறந்து வைத்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டோர் உள்ளிட்டோருக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ள பொலிஸார் மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு நகர்ப் பகுதி, புகையிரத நிலைய வீதி, பார் வீதி மற்றும் கூளாவடி போன்ற பகுதிகளில் அநாவசியமாக நடமாடித் திரிந்தவர்கள் உள்ளிட்ட 70க்கும் மேற்பட்டோர் இதன்போது பொலிஸாரினால் கைது செய்து பஸ்களில் ஏற்றிச் சென்று பார் வீதியில் வைத்து அன்ரிஜன் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இதன்போது வீதிகளில் அநாவசியமாக நடமாடியவர்களில் 05 பேர் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களாக இனங்காணப்பட்டுள்ளதாக கோட்டைமுனை பொது சுகாதாரப் பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தெரிவித்தார்.

# ஊரடங்கால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஐக்கிய காங்கிரஸால் வாழ்வாதார உதவிகள்

(பாறுக் ஷிஹான்)

பொதுமுடக்கத்தால் வாழ்வாதாரத்தை இழந்துள்ளவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி வைக்கும் நிகழ்வுகள் ஐக்கிய காங்கிரஸ் தலைவர் முபாரக் அப்துல் மஜீதின் நெறிப்படுத்தலில் நாட்டின் பல பாகங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.





கல்குடா தொகுதி அமைப்பாளரும் ஐக்கிய காங்கிரஸின் பிரதித்தலைவர்களில் ஒருவருமான சல்மான் வஹ்ஹாப் தலைமையில் ஓட்டமாவடியிலும், கொழும்பு பிரதான இணைப்பாளரும் கட்சியின் உப தவிசாளருமான மௌலவி இன்ஆம் தலைமையில் கொழும்பிலும், வன்னி மாவட்ட இணைப்பாளரும், கட்சியின் தேசிய அமைப்பாளர் சதீக் தலைமையில் மன்னாரிலும், காத்தான்குடி இணைப்பாளர் அன்வர் தலைமையில் காத்தான்குடியிலும், கட்சியின் கொள்கை பரப்பு செயலாளர் சப்வான் தலைமையில் புத்தளத்திலும் நேற்று வறிய மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வறிய மக்களுக்கு உதவும் முகமாக ஐக்கிய காங்கிரஸினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய கல்முனை அக்ரம் பாம் ஹவுஸினால் வழங்கப்பட்ட நிதியுதவி மூலம் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளத்தில் 53 பேருக்கு கொரோனா தொற்று

(ஜூட் சமந்த)

புத்தளம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 53 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, நேற்று முன்தினம் புத்தளம் பிரதேசத்தில் 22 பேருக்கும், சிலாபம் பிரதேசத்தில் 13 பேருக்கும் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

மேலும், வென்னப்புவ பிரதேசத்தில் 15 பேருக்கு தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளதுடன் கற்பிட்டியில் மூவர் கொரோனா நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் மாத்திரம் கொரோனா தொற்றினால் புத்தளம் மாவட்டத்தில் ஐவர் உயிரிழந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# உலக செய்திகள்

## பசியும் பட்டினியுமாக அண்டை நாடுகளின் எல்லைகளில் காத்திருக்கும் ஆப்கானியர்கள்



*எல்லைகளில் காத்திருக்கும் ஆப்கானியர்கள் (செயற்கைக்கோள் புகைப்படம்)*

தலிபான்களின் கைகளில் ஆப்கானிஸ்தான் மீண்டும் சிக்கிவிட்டதைத் தொடர்ந்து அந்த நாட்டிலிருந்து பல ஆயிரம் பேர் தப்பிச்சென்று பாகிஸ்தான் எல்லையருகே காத்திருப்பது செயற்கைக்கோள் படங்கள் மூலம் உறுதியாகியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் தெற்கு காந்தஹார் மாகாணத்தின் ஸ்பின்போல்டாக் மாவட்டத்திலுள்ள சாமான் பார்டர் எல்லையில் பல்லாயிரக்கணக்கானோர் குவிந்துள்ளனர். தங்கள் குழந்தைகள் மற்றும் உடைமைகளை வைத்துக்கொண்டு பாகிஸ்தான் எல்லையில் அவர்கள் கால்கடுக்க நின்று கொண்டிருப்பது உறுதியாகியுள்ளது. இந்த செயற்கைக்கோள் படம் கடந்த 6ஆம் திகதி எடுக்கப்பட்டதாகும். அந்த மக்கள் பாகிஸ்தானுக்குள் தஞ்சம் புகுந்தார்களா என்பது தெரியவில்லை.

காபூல் விமான விமான நிலையம் மீண்டும் தாலிபான்களின் வசம் வந்துவிட்டதால் அங்கிருந்து விமானங்கள் மூலம் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்வது இயலாத காரியமாக மாறியுள்ளது. இதனால் பாகிஸ்தான் எல்லைகளான டோர்காக், ஸ்பின்போல்டாக், தஜிகிஸ்தான் எல்லையான ஷிர்கான், ஈரான் எல்லையான இஸ்லான் குவாலா ஆகிய பாதைகள் மூலம் ஆப்கானியஸ்தர்கள் உயிர் தப்பி வருகின்றனர். தலிபான்களின் ஆட்சி எவ்வளவு கோரமாக இருக்கும் என்பதற்கு அங்கிருந்து தப்பியோடும் சொந்த நாட்டு மக்களின் நிலையே கட்டியம் கூறுவதாக இருக்கிறது.

**தேடித்தேடி பழிவாங்கும் தலிபான்கள்**

தலிபான்கள் ஆட்சியமைத்துள்ள ஆப்கானிஸ்தானில் பெண்கள், முன்னாள் இராணுவ வீரர்கள் மீதான அடக்குமுறைகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. தலிபான்களை எதிர்த்தவர்கள் தேடித்தேடி வேட்டையாடப்படுவதால் மக்களிடம் பெரும் அச்சம் நிலவுகிறது. முன்னாள் இராணுவத்தினர் மற்றும் நேட்டோ படைகளுக்கு உதவிய ஆப்கானிஸ்தானியர்களை தேடித்தேடி பழிவாங்கும் நடவடிக்கைகளை தலிபான்கள் தொடங்கிவிட்டனர். தலைநகர் காபூலில் முன்னாள் அரசு அதிகாரிகள் மற்றும் இராணுவ வீரர்களை கொத்துக் கொத்தாக கார்களில் கடத்திச் செல்லும் வீடியோ காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

**ஆடைக் கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு - ஒன்லைனில் பிரசாரம்**

ஆப்கானிஸ்தானில் தலிபான் அறிவித்துள்ள பெண்களுக்கான கடுமையான ஆடைக் கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக உலகம் முழுவதும் வாழும் பல ஆப்கான் பெண்கள் பாரம்பரிய உடையணிந்து அப்புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து வருகின்றனர்.

தலிபான்கள் முக்கியத்துவம் கொடுக்கும் முகத்தை மூடும் ஹிஜாபை புறக்கணித்து, வண்ண வண்ண பாரம்பரிய உடையணிந்து அவற்றை பகிர்ந்து வருகின்றனர்.

ட்விட்டரில் #DoNotTouchMyClothes, #AfghanistanCulture போன்ற ஹேஷ்டேகுகளை பயன்படுத்தி புகைப்படங்களை அவர்கள் பகிர்ந்து வருகின்றனர்.

**1.24 இலட்சம் பேர் பாதுகாப்பாக மீட்பு - அமெரிக்கா தகவல்**

ஆப்கானிஸ்தானிலிருந்து 1.24 இலட்சம் பேர் மீட்கப்பட்டுள்ளதாக அமெரிக்க வெள்ளை மாளிகை தகவல் தெரிவித்துள்ளது.

ஆப்கானிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறத் தொடங்கிய சூழ்நிலையைப் பயன்படுத்தி தலிபான்கள், ஆப்கானிஸ்தானை முழுவதுமாக கைப்பற்றி, அங்கு ஆட்சியமைப்பதற்கான பல்வேறு பணிகளையும் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னதாக, ஆப்கானிஸ்தானிலுள்ள தூதரகங்களை மூடி பல்வேறு நாடுகள் தங்களுடைய நாட்டினரை மீட்கும் பணியில் ஈடுபட்டன. இதில் அதிகபட்சமாக அமெரிக்கா, தங்கள் நாட்டு அதிகாரிகள், படை வீரர்கள் உள்பட 1.24 இலட்சம் பேரை மீட்டுள்ளது.

அமெரிக்காவின் செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் இதுகுறித்து தெரிவிக்கையில், ஆப்கானிஸ்தானிலிருந்து 1,24,000 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். எங்களுடைய இராணுவம் மற்றும் உளவுத்துறை வல்லுநர்கள் மூலமாக மட்டுமே கற்பனை செய்ய முடியாத மிகவும் கடினமான இந்த சூழ்நிலையை எதிர்கொள்ள முடிந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஆப்கானிலிருந்து வந்தவர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடும் பணிகள் தொடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## நீதிமன்றத்தில் மயங்கி சரிந்த ஆங் சான் சூகி



வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்ட மியன்மாரின் தலைமை அரசியல் தலைவர் ஆங் சான் சூகிக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் மீதான வழக்கு விசாரணை திகதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மியன்மாரில் கடந்த பெப்ரவரியில் அந்நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி மற்றும் ஜனாதிபதி வின் மைண்ட் ஆகியோரை இராணுவம் சிறைப்பிடித்தது.

ஆங் சான் சூகி மீது தகவல் தொடர்பு சாதனங்களை சட்டவிரோதமாக இறக்குமதி செய்து வைத்திருந்தமை, தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தை மீறியமை, காலனித்துவ கால அதிகாரபூர்வ இரகசிய சட்டத்தை மீறியமை உட்பட 6 குற்றச்சாட்டுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதுதொடர்பான வழக்கு விசாரணை தலைநகர் நேபிடாவிலுள்ள நீதிமன்றத்தில் கடந்த ஜூலை மாதம் தொடங்கியது.

இந்நிலையில், இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. இதற்காக ஆங் சான் சூகி, தான் சிறை வைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து காரில் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். அவர் நீதிமன்ற அறைக்குள் நுழைந்தபோது மிகவும் சோர்வாகக் காணப்பட்டார். திடீரென தலை சுற்றியதால் அங்கிருந்த நாற்காலியில் அப்படியே அமர்ந்தார். தனக்கு உடல்நலம் சரியில்லை என அவர் தனது சட்டத்தரணிகளிடம் தெரிவித்தார். இதையடுத்து, அவர்கள் நீதிபதியிடம் வழக்கு விசாரணையை ஒத்திவைக்குமாறு கோரிக்கை விடுத்தனர். நீதிபதிகள் அதனை ஏற்று வழக்கு விசாரணையை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர்.

## உலோகக் கழிவுகளால் உருக்கொண்ட மோடி



ஆந்திராவில் உலோகக் கழிவுகளைப் பயன்படுத்தி பிரதமர் மோடியின் 14 அடி உயர சிலையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

குண்டூரைச் சேர்ந்த சிற்பக் கலைஞர் வெங்கடேஷ் வர ராவ், அவரது மகன் ரவி சந்திரா ஆகியோர் இணைந்து ஓட்டோமொபைல் நிறுவனங்களிலிருந்து வீசப்பட்ட பயன்படாத உலோகங்களையும், உலோகக் கழிவு விற்கும் சந்தையிலிருந்து பெற்ற உலோகங்களையும் கொண்டு இச்சிலையைச் செய்துள்ளனர்.

ஒரு தொன்னுக்கும் அதிகமான உலோகக் கழிவுகளைப் பயன்படுத்தி, பத்து பேரைக்கொண்டு, சுமார் 600 மணிநேரத்தில் சிலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஆப்கான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட கேரளாவைச் சேர்ந்த 25 ஐ.எஸ். தீவிரவாதிகள்

### இந்தியாவுக்கு ஆபத்து - உளவுத்துறை எச்சரிக்கை

ஆப்கான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட கேரளாவைச் சேர்ந்த 25 ஐ.எஸ். ஆதரவாளர்களால் இந்தியாவுக்கு ஆபத்துள்ளதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலகின் பல நாடுகளில் இயங்கி வரும் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பால் ஈர்க்கப்பட்டு, கேரளாவைச் சேர்ந்த 25 பேர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் ஆப்கான் சென்றனர். மேற்கண்ட அனைவரும் கடந்த 2016 முதல் 2018 ஆம் ஆண்டுக்கிடையில் பல்வேறு காலகட்டங்களில் ஆப்கானிஸ்தானுக்கு சட்டவிரோதமாக தப்பிச் சென்றனர்.

தற்போது, ஆப்கான் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதால், சிறைகளில் அடைக்கப்பட்ட ஐ.எஸ். தீவிரவாதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். அவர்களில், இந்தியாவைச் சேர்ந்த ஐ.எஸ். ஆதரவாளர்கள் 25 பேரும் அடங்குவர் என்று இந்திய உளவுத்துறை தெரிவித்துள்ளது.

குறித்த 25 ஐ.எஸ். ஆதரவாளர்கள் அனைவரும் மீண்டும் இந்தியாவுக்குள் நுழைய வாய்ப்புள்ளதாகவும், இந்திய தேசிய விசாரணைக் குழுவின் (என்.ஐ.ஏ.) பட்டியலிலுள்ள இவர்கள், இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த வாய்ப்புள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஆப்கானிஸ்தானிலிருந்து வரும் விமானங்கள் கண்காணிக்கப்பட்டு வந்தன. தற்போது கடலோர மாவட்டங்கள், சர்வதேச எல்லைகளை உன்னிப்பாக கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## காதலனை கரம்பிடித்தார் பிரிட்னி ஸ்பியர்ஸ்



அமெரிக்காவைச் சேர்ந்த பன்முகத்திறமை கொண்ட பிரிட்னி ஸ்பியர்ஸ் தனது நீண்டநாள் காதலரான சேம் அஸ்காரியைப் பதிவுத் திருமணம் செய்துகொண்டுள்ளார். இது அவரது மூன்றாவது திருமணமாகும்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் 2008 ஆம் ஆண்டுமுதல் சுயமாக தீர்மானம் எடுக்க முடியாத நிலையிலிருந்த பிரிட்னி, பெரும் மகிழ்ச்சியுடன் இருப்பதாக அறிவித்துள்ளார்.

பிரிட்னி ஸ்பியர்ஸ், தனது தந்தையின் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்ததுடன், அந்தக் கட்டுப்பாடுகளை விடுவிப்பதற்கு நீதிமன்றத்தினூடாக சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

தனது பொருளாதாரம் சார்ந்த, வாழ்க்கை சார்ந்த எந்தவொரு முடிவையும் எடுக்கும் உரிமை பிரிட்னி ஸ்பியர்ஸுக்கு மறுக்கப்பட்டது. கடந்த 13 ஆண்டுகளாகவே தனது வாழ்க்கை குறித்த எந்த முடிவையும் சுயமாக எடுக்க உரிமையில்லாதவராக பிரிட்னி ஸ்பியர்ஸ் இருந்துவந்தார்.

இத்தனை வருடங்களாக தான் அனுபவித்து வரும் கட்டுப்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என பிரிட்னி ஸ்பியர்ஸ் அண்மையில் நீதிமன்றத்தில் உருக்கமான வேண்டுகோளை முன்வைத்தார்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் பிரபல பொப்பிசைப் பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ், பாடகி, பாடலாசியர், நடிகை என பன்முகத்தன்மை கொண்டவர். இவர் தனது பதின்பருவத்திலேயே பொப்பிசையில் மிகவும் பிரபலமாக அறியப்பட்டார். இதையடுத்து பொப்பிசையின் இளவரசி என பிரிட்னி ஸ்பியர்ஸ் அழைக்கப்பட்டார்.

எந்தளவுக்கு புகழின் உச்சக்குச் சென்றாரோ, அதேயளவு சர்ச்சைகளிலும் சிக்கியவர் பிரிட்னி ஸ்பியர்ஸ். தனது திருமணம், விவாகரத்து, குழந்தை பராமரிப்பு தொடர்பில் அவர் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளானார். இதனையடுத்து மனநல மையத்தில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. இந்நிலையில், இது தொடர்பான வழக்கில் கடந்த 2008 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம் தந்தை ஜேமி ஸ்பியர்ஸ் மற்றும் வழக்கறிஞர் ஆண்ட்ரூ வாலட் ஆகியோரின் கட்டுப்பாட்டில் பிரிட்னி ஸ்பியர்ஸ் இருக்க வேண்டும் என உத்தரவிட்டது.

தனது பொருளாதாரம் சார்ந்த, வாழ்க்கை சார்ந்த எந்தவொரு முடிவையும் எடுக்கும் உரிமை பிரிட்னி ஸ்பியர்ஸுக்கு மறுக்கப்பட்டது. கடந்த 13 ஆண்டுகளாகவே தனது வாழ்க்கை குறித்த எந்த முடிவையும் சுயமாக எடுக்க உரிமை இல்லாதவராக பிரிட்னி ஸ்பியர்ஸ் இருந்தார். இந்நிலையிலேயே கட்டுப்பாடுகளை விடுவித்துக்கொள்வதாக பிரிட்னி ஸ்பியர்ஸின் தந்தை தெரிவித்ததையடுத்து பிரிட்னி பதிவுத் திருமணம் செய்து கொண்டுள்ளார். அவரது பதிவுத்திருமண புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பேசுபொருளாக மாறியுள்ளன.



## நைஜீரியாவில் சிறையைத் தகர்த்து 240 கைதிகள் தப்பியோட்டம்

நைஜீரியாவின் கோகி மாகாணத்திலிருக்கும் கெப்பா சிறைச்சாலையில் அடையாளம் தெரியாத தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தி அங்கிருந்த 240 கைதிகளைத் தப்ப வைத்திருக்கிறார்கள்.

கெப்பா சிறைச்சாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (செப்டெம்பர் 12) இரவு தடுப்புச் சுவரை சக்திவாய்ந்த வெடிகுண்டுகளை வைத்து தகர்த்தும், துப்பாக்கிச்சூடு நடத்தியும் 240 கைதிகளை தப்பவைத்திருக்கிறார்கள்.

இதுகுறித்து அந்நாட்டின் உள்துறை அமைச்சர் ராஃப் அரெக்பசுலோ தெரிவிக்கையில்,

தப்பி ஓடிய குற்றவாளிகளைப் பற்றிய தகவல்களை 'இன்டெர்போல்' அமைப்பிடம் சமர்ப்பித்திருக்கிறோம் . ஒருவேளை நாட்டைவிட்டு அவர்கள் வெளியேறினாலும் பிடிக்க வாய்ப்பிருக்கிறது. கெப்பா சிறைச்சாலையிலிருந்த 294 கைதிகளில் 224 விசாரணைக் கைதிகளும், 70 குற்றவாளிகளும் இருந்தனர்.

இத்தாக்குதலில் ஈடுபட்டு பெரிய சேதாரத்தை ஏற்படுத்தி இரண்டு காவலாளிகளையும் கொன்ற தீவிரவாதிகளை உடனடியாக கைது செய்வோம் என்றும் உறுதியளித்துள்ளார்.

முன்னதாக கடந்த ஏப்ரல் மாதம் அடையாளம் தெரியாத தீவிரவாதிகள் இமொ மாகாணத்திலிருக்கும் சிறையில் துப்பாக்கிச்சூடு நடத்தி 1,800 கைதிகளைத் தப்ப வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## நியூயோர்க்கில் களைகட்டிய 'மெட் காலா'







அமெரிக்காவில் நடந்த 'மெட் காலா' நிகழ்ச்சியில் பிரபல பாடகர் Lil Nas X வித்தியாசமான பெஷன் உடையணிந்து வந்து அனைவரது கவனத்தையும் ஈர்த்தார்.



ஆண்டுதோறும் இடம்பெறும் இந்நிகழ்ச்சிக்கு பல்வேறு துறைகளைச் சேர்ந்த நட்சத்திரங்கள் வித்தியாசமான ஃபேஷன் உடைகளை அணிந்து வருவது வழக்கம். மூன்றடுக்கு தங்க நிற உடையணிந்து வந்த Lil Nas X அவற்றை ஒவ்வொன்றாக கழற்றி புகைப்படக்காரர்களுக்கு போஸ் கொடுத்தார்.

நிகழ்ச்சிக்கு வந்த டென்னிஸ் வீராங்கனை நஓமி ஒசாக்கா தலையில் வித்தியாசமான ஹேர்பேண்டை கட்டியபடி வந்து பார்வையாளர்களைக் கவர்ந்தார்.



# லிவர்பூல் வீரரின் கால் உடைந்தது

இங்கிலிஷ் பிரீமியர் லீக் உதைபந்தாட்டப் போட்டியில் ஞாயிறன்று நடந்த ஆட்டத்தில் லிவர்பூல் வீரர் ஹார்வி எலியட் படுகாயமடைந்தார். அவரது கால் இரண்டாக உடைந்ததால் லிவர்பூல் அணி வீரர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

லீட்ஸ் யுனைடெட் அணிக்கு எதிராக நடந்த ஆட்டத்தில் லிவர்பூல் அணி வீரர் தூக்கி அடித்த பந்தை வலது புறம் வாங்கி அபாரமாக எடுத்துச் சென்றார் ஹார்வி எலியட். அப்போது லீட்ஸ் யுனைடெட் அணி வீரர் பாஸ்கல் ஸ்ட்ரூய்க் இடையில் காலைவிட்டு டேக்கிள் செய்ததால் கீழே விழுந்தார் எலியட். இதனைப் பார்த்த மற்றொரு லிவர்பூல் வீரர் மொகமட் சலா உடனே மருத்துவ உதவியை அழைத்தார்.

கால் உடைந்த ஹார்வி ஸ்ட்ரெச்சரில் எடுத்துச் செல்லப்பட்டார். அபாயகரமாக டேக்கிள் செய்த பாஸ்கல் ஸ்ட்ரூய்ட் சிகப்பு அட்டைக் காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

ஹார்வி எலியட் ஒரு ப்ராடிஜி என்று அழைக்கப்படுபவர். 16 வயதில் ஃபுல்ஹாம் அணிக்காக இங்கிலிஷ் பிரிமியர் லீக்கில் அறிமுகமானவர்.

# அமெரிக்க ஓபன் பெண்கள் இரட்டையர் சம்பியனான அனுபவ வீராங்கனைகள்





அமெரிக்க பெண்கள் இரட்டையர் இறுதிப் போட்டியில் அமெரிக்க இளம் வீராங்கனைகளான கோகோ காஃப், கேத்தரின் மெக்னெல்லி ஆகியோரை எதிர்த்து விளையாடிய அனுபவ வீராங்கனைகளான சீனாவின் ஜாங் ஷுவாய், அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசர் ஆகியோர் சம்பியனாகினர். முதல் செட்டை 6-3 எனும் புள்ளி கணக்கில் வெற்றி பெற்ற ஜாங் ஷுவாய், சமந்தா ஸ்டோசர் ஜோடி இரண்டாவது செட்டில் 3-6 என்ற கணக்கில் தோல்வியடைந்தது. மூன்றாவது செட்டில் 4-3 எனும் புள்ளிக் கணக்கில் பின்னடைவைச் சந்தித்து மீண்டெழுந்து 6-3 புள்ளிகளைப் பெற்று வெற்றி பெற்றது.

இந்த வெற்றியால், முன்னாள் அமெரிக்க ஓபன் பெண்கள் ஒற்றையர் சம்பியன் ஸ்டோசர் மகிழ்ச்சியடைந்துள்ளார். "16 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த கோப்பையை மீண்டும் பெறுவது ஒரு உணர்வு" என்று 37 வயதான அவர் கூறினார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com



# மொஹமட் சாலஹ் 100 ஆவது கோல்



இங்கிலிஷ் இங்கிலாந்து பிரிமியர் லீக் போட்டியில் லிவர்பூல் வீரர் மொஹமட் சாலஹ் 100 ஆவது கோலை அடித்துள்ளார். இங்கிலாந்து பிரீமியர் லீக் போட்டியில் 100 கோல் அடித்த 30 ஆவது வீரர் மொஹமட் சாலஹ். இதேவேளை விரைவாக 100 கோலடித்த ஐந்தாவது வீரராக சாலஹ் விளங்குகிறார்.

ஆலன் ஷியரர் (124), ஹாரி கேன் (141), செர்ஜியோ அகுவெரோ (147) இ தியரி ஹென்றி (160) ஆகியோர் முதல் நான்கு இடங்களில் உள்ளனர். 162 போட்டிகளில் விளையாடிய எகிப்திய மொஹமட் சாலஹ் 100 கோல்கள் அடித்தார்.மொஹமட் சாலஹ் தனது முதல் பிரீமியர் லீக் கோலை செல்சியாவுக்காக அடித்தார். லீட்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 20 ஆவது நிமிடத்தில் மொஹமட் சாலஹ் 100 ஆவது கோலை அடித்தார்.

# பந்துக்காக நாயை விரட்டிய வீராங்கனைகள்



கிரிக்கெட் போட்டி நடக்கும் போது ரசிகர்கள் அத்துமீறி நுழைந்து வீரர்களிடம் ஆட்டோகிராப் வாங்குவது, புகைப்படம் எடுப்பது, பேசுவது போன்ற சம்பவங்களைத்தான் இதுவரை கேட்டிருந்தோம். ஆனால், ஒரு நாய் உள்ளே புகுந்து பந்தை எடுத்துச்சென்ற வினோதமான சம்பவம் அயர்லாந்தில் நடந்துள்ளது.

பெல்பாஸ்ட் நகரில் அயர்லாந்து உள்நாட்டு மகளிர் ரி20 போட்டிகள் நடந்து வருகின்றன. பிரடி , சி.எஸ்.என்.ஐ. அணிகளுக்கு இடையிலான அரையிறுதி ஆட்டத்தின் போதே நாய் உள்ளே புகுந்தது.

மழை காரணமாக ஆட்டம் தடைபட்டு டக்வொர்த் லூயிஸ் விதிப்படி 12 ஓவர்களில் 74 ஓட்டங்கள் எனும் இலக்கு சி.எஸ்.என்.ஐ. அணிக்கு நிர்ணயிக்கப்பட்டது. சி.எஸ்.என்.ஐ. அணி 6 விக்கெட் இழப்புக்கு 47 ஓட்டங்கள் சேர்த்திருந்தது. 21 பந்துகளில் 27 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி எனும் இக்கட்டான கட்டத்தில் சி.எஸ்.என்.ஐ. அணி இருந்தது.

9ஆவது ஓவரை பிரெடி அணி பந்துவீச்சாளர் வீசினார், வீராங்கனை அபி லெக்கி துடுப்பெடுத்தாடினார். 3ஆவது பந்தை வீசியபோது அபி லெக்கி பந்தை தட்டிவிட்டு ஓடினார்.

களத்தடுப்பாளர் பந்தை பிடித்து விக்கெட் கீப்பர் ராச்செல் ஹெப்பர்னிடம் வீசினார். அப்போது ஒரு நாய்க்குட்டி அவருடன் சேர்ந்து ஓடியது. பந்தைப் பிடித்து விக்கெட் கீப்பர் ஹெப்பர்ன் ஸ்டெம்பில் அடிக்க முயன்றபோது பந்து தவறியது.

அந்த நாய் பந்தைக் கௌவிக் கொண்டு மீண்டும் பார்வையாளர் மாடத்தை நோக்கி ஓடியது. இதைப் பார்த்த மைதானத்தில் இருந்த வீராங்கனைகள், பார்வையாளர்கள் அனைவரும் சிரித்தனர். வீராங்கனை ஒருவர் நாயைத் துரத்திச் சென்றார். நாயின் உரிமையாளரும் மைதானத்துக்குள் ஓடினார். இன்னொரு வீராங்கனை நாயைப் பிடித்தார். நாயிடம் இருந்து பந்தை வாங்கி, வீராங்கனை ஒருவர் நாயை உரிமையாளரிடம் கொடுத்தார்.




# ஸிம்பாப்வே அணியின் பிரெண்டன் டெய்லர் ஓய்வு பெற்றார்



ஸிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், சகலதுறை வீரருமான பிரெண்டன் டெய்லர் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.

2004இல் இலங்கைக்கு எதிராக சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அறிமுகமான பிரெண்டன் டெய்லர் ஸிம்பாப்வே அணியின் முக்கியமான வீரராவார். 202 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய பிரெண்டன் டெய்லர், 6,677 ஓட்டங்களை எடுத்தார். ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்களை எடுத்த இரண்டாவது ஸிம்பாப்வே வீரராவார். அண்டி பிளவர் அதிகபட்சமாக 213 போட்டிகளில் 6,786 ஓட்டங்கள் எடுத்து முதலிடத்தில் உள்ளார்.

34 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 254 பவுண்டரிகள், 22 சிக்சர்கள் அடங்கலாக 2,320 ஓட்டங்கள் அடித்தார். டெய்லரின் சராசரி 36.25 ஆகும். 6 சதங்கள் 12 அரைசதங்களை எடுத்துள்ளார். அதிகபட்சமாக 171 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

ஒருநாள் கிரிக்கெட்டில் 204 போட்டிகளில் விளையாடி 6,677 ஓட்டங்கள் அடித்தார். ஒருநாள் கிரிக்கெட்டில் 11 சதங்கள் 39 அரைசதங்களை பிரெண்டன் டெய்லர் எடுத்துள்ளார். அதிகபட்ச ஓட்டங்கள் 145 ஆகும்.

45 , ரி20 சர்வதேச போட்டிகளில் 934 ஓட்டங்களை எடுத்த டெய்லரின் அதிகபட்ச ஓட்டங்கள் ஆட்டமிழக்காது 75 ஆகும். ஸ்ட்ரைக் ரேட் 118.22. இதில் 6 அரைசதங்களை எடுத்துள்ளார். ஒருநாள் போட்டிகளில் 106 சிக்சர்கள், 598 பவுண்டரிகள் விளாசியுள்ளார். விக்கெட் கீப்பராக 133 கேட்ச்கள் 20 ஸ்டம்பிங்குகளைச் செய்துள்ளார். ரி20 கிரிக்கெட்டில் 93 பவுண்டரிகள் 24 சிக்சர்கள், 20 கேட்ச்கள் 2 ஸ்டம்பிங்குகள் செய்துள்ளார்.


ஓய்வு குறித்து பிரெண்டன் டெய்லர் கூறும்போது, “ கனத்த இதயத்துடன் இந்த முடிவை எடுத்துள்ளேன். 17 ஆண்டுகள் உச்சமும் தாழ்வும் உள்ள அனுபவம். உலகிற்காக நான் இதை மாற்ற முடியாது.

கிரிக்கெட் எனக்கு எளிமையைக் கற்றுக் கொடுத்தது. அணியை நல்ல நிலையில் இருத்த வேண்டும் என்பதே எனது இலட்சியமாக இருந்துள்ளது. 2004இல் வரும்போது அந்த எண்ணத்தில்தான் வந்தேன். இப்போது அதை நிறைவேற்றியதாகவே கருதுகிறேன்” என்று உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

2015இல் சிம்பாவே கிரிக்கெட்டை துறந்து கோல்பாக் டீலில் நொட்டிங் ஹம்சயருக்கு ஆடச் சென்றார். பிறகு 2017இல் ஸிம்பாப்வே அணிக்குத் திரும்பினார். 2011-2014இல் ஸிம்பாப்வே அணிக்கு தலைமை தாங்கினார்.

தமிழன்
வணிக உலகம்
Business world
GROWTH
www.thamilan.lk

# பயன்படுத்தப்படாத 'Data Rollover'ஐ அடுத்த பில் கட்டணத்திற்கு எடுத்துச் சென்று Postpaid வாடிக்கையாளர்களுக்கு வசதிகளை வழங்கும் Airtel




எயார்டெல் லங்காவின் புரட்சிகர4G சேவை மற்றும் Freedom Packs அறிமுகப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, நிறுவனம் தனது முதல் Freedom Postpaid திட்டங்களுக்கான தனித்துவமான 'Data Rollover' அம்சத்தை முதன்முறையாக இலங்கைக்கு அறிமுகப் படுத்தியுள்ளது. இந்த புதிய அறிமுகத்தின் மூலம் வாடிக்கையாளர்களால் பயன்படுத்தப்படாத அனைத்து டேட்டாவையும் அடுத்த பில் செலுத்தும் வரை பயன்படுத்த வாய்ப்பளித்துள்ளது.

தொலைத்தொடர்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் தங்கள் Postpaid வாடிக்கையாளர் களிடம் தவணை கட்டணம் அறவிடுவது தற்போது ஒவ்வொரு கட்டண காலத்தின் முடிவிலும் ஒரு புதிய டேட்டா Postpaid ஒதுக்கீட்டை செய்து மற்றும் கடந்த கட்டண காலத்தின் போது பயன்படுத்தப்படாத அனைத்து டேட்டாவையும் இரத்துச் செய்கிறது. இப்போது வரை, Postpaid வாடிக்கையாளர்கள் தாங்கள் செலுத்திய இந்த கடந்த கால டேட்டாவை பயன்படுத்தி கொள்ள வேறு வழியில்லை மற்றும் 'Data Rollover' வசதிகள் இப்போது அந்த வாய்ப்பை வழங்குகிறது. அதுபோல, 'Data Rollover' வசதி, எயார்டெல் நிறுவனத்தை எளிமையான மற்றும் சிறந்த மதிப்பு கூட்டப்பட்ட வலையமைப்பு அனுபவமாக மாற்றுவது மட்டுமல்லாமல், முழுத் துறையிலும் வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட அணுகுமுறையுடன் வாடிக்கையாளருக்கு அதிகாரம் அளிப்பதற்காக இலங்கையில் தொலைபேசி தொலைத் தொடர்புக்கான ஒரு புத்தாக்கம் கொண்ட அணுகுமுறையையும் உருவாக்கும் முதலாவது நிகழ்வு இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

'Data Rollover' வாடிக்கையாளர்கள் அடுத்த மாதம் தங்கள் மீதமுள்ள டேட்டா 200 GB வரை கொண்டு சென்று புதிய மாத நன்மையாகப் பயன்படுத்தலாம். இந்த புதிய அம்சம் 'Rollover' வாடிக்கையாளர்கள் டேட்டா காலாவதி மற்றும் அவர்கள் ஏற்கனவே பணம் செலுத்திய டேட்டா வீணாவதை பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்பதை உறுதி செய்கிறது. இந்த 'Rollover' அம்சமான புதிய Freedom Postpaid திட்டங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற வசதிகளுடன் இயல்பாக கிடைக்கும்.

"எங்கள் உலகத்தரம் வாய்ந்த 4G சேவைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம், நாங்கள் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சுதந்திரம் கொடுக்க விரும்புகிறோம். எங்கள் சேவைகள் அனைத்தும் இப்போது தற்போதைய தரத்திலிருந்து சற்று விலகி, எளிமையான மற்றும் தடையற்ற தொலைபேசி தொடர்பை நோக்கி நகர்வதில் கவனம் செலுத்துகின்றன. தொழில்துறையில் முதன்முதலில் பயன்படுத்தப்பட்ட இரண்டு சேவைகளை இலங்கைக்கு அறிமுகப்படுத்துவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். மேலும் எயார்டெல் 4G உடன் உண்மையான வலையமைப்பு அனுபவத்தை அனுபவிக்க உங்களை அழைக்க விரும்புகிறோம்" என எயார்டெல் லங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஆஷிஷ் சந்திரா தெரிவித்தார்.

இந்த அம்சம் மாதந்தோறும் பயன்படுத்தப்படாத டேட்டா இழப்பதைத் தடுக்கிறது. இதனால் வாடிக்கையாளர்களால் பயன்படுத்தப்படாத டேட்டாக்களுக்கு பணம் செலவழிக்க வேண்டியதில்லை. குறிப்பாக ஒவ்வொரு மாதமும் மாறுபடும் டேட்டா தேவைகள் உள்ளவர்களுக்கு, இந்த 'Data Rollover' வசதி மிகவும் நன்மை பயக்கும்.

எயார்டெல் லங்கா தற்போது Freedom பிரிவின் கீழ் தொழில்துறையில் மிகவும் கவர்ச்சிகரமான இரண்டு Postpaid திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. Freedom 900 கட்டணத் திட்டம் 40GB 4G டேட்டாவுடன் ஏனைய வலையமைப்புகளுக்கு 500 நிமிட இலவச அழைப்பையும், Freedom 1800 கட்டணத் திட்டம் 100GB Any time 4G டேட்டாவையும் ஏனைய வலையமைப்புகளுக்கு 500 நிமிட இலவச அழைப்பையும் வழங்குகிறது. இரண்டு தொகுப்புகளும் செல்லுபடியாகும் காலம் முழுவதும் எல்லையற்ற எயார்டெல் அழைப்புகளை வழங்குவதுடன் டேட்டா Rollover Postpaid வசதிகளையும் உள்ளடக்கியது.

இந்த 'Freedom Packs/Plans'ஆனது 2009இல் எயார்டெல் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து செய்த மிகப்பெரிய ஒற்றை முதலீடு ஆகும். எயார்டெல்லின் நோக்கம் - கட்டமைக்கப்பட்ட 4G சேவை பாவனையாளர்களுக்கு சிறந்த அனுபவத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில் 99% இடையூறு இல்லாத வீடியோ பார்க்கவும் மற்றும் 4G சிக்னல்களுடன் மேம்படுத்தப்பட்ட உள்ளக Coverage வசதிகளைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பாரதி எயார்டெல் லங்கா நிறுவனம் தொடர்பாக:** 2009 ஜனவரி 12ஆம் திகதி இலங்கையில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்த பாரதி எயார்டெல் (எயார்டெல் லங்கா) நிறுவனம் தற்போது ஒருமில்லியன் வாடிக்கையாளர் மட்டத்தை நெருங்கிய இலங்கையின் வேகமான தகவல் தொலைத்தொடர்பு வலயமாகும். தமது வணிக செயற்பாடுகளை ஆரம்பித்த 2009ஆம் ஆண்டிலிருந்து 3 வருட குறுகிய காலப்பகுதிக்குள் எயார்டெல் நாட்டில் எல்லா பகுதிகளிலும் பரந்து விரிந்த சேவையை வழங்கியதோடு இன்று நாடு முழுவதிலும் தமது சேவையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எயார்டெல் லங்கா தொலைத்தொடர்பு வலையமைப்பு சேவைகள் மற்றும் நிறுவன ரீதியான தீர்வுகள் உட்பட டிஜிட்டல் தொலைத்தொடர்பு சேவைகள் பலவற்றையும் வழங்குகின்றது. மேலதிக தகவல்களுக்கு www.airtel.lkஎன்ற இணையத்தளத்தை பார்வையிடவும்.

# இலங்கையின் சிறு மற்றும் நடுத்தர அளவிலான ஆடை நிறுவனங்களில் நம்பிக்கையை வலுப்படுத்துவது எல்லா வகையிலும் சிறந்த விடயம்

## ஒன்றிணைந்த ஆடை சங்கங்கள் மன்றம்





மைக்ரோ, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) எந்தவொரு பொருளாதாரத்திற்கும் முதுகெலும்பாக இருக்கின்றன, இலங்கைக்கும் அதேபோல்தான். மைக்ரோ, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (SME) இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கியமான பங்களிப்பாளராக உள்ளன. இது பொருளாதாரத்தில் முக்கியமான துறையான இலங்கை ஆடைத் துறையை முன்னிலைப்படுத்துகிறது. ஒட்டுமொத்தமாக, இலங்கையின் ஆடைத் தொழில் இலங்கையின் ஏற்றுமதி மற்றும் அந்நியச் செலாவணி வருவாயில் சுமார் 48% பங்களிப்பு செய்கிறது. மேலும், ஆடைத்தொழில் 84 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 7% பங்களிக்கிறது. மேலும், இந்தத் துறை நாட்டின் தொழில் துறையில் உள்ள அனைத்து வேலைவாய்ப்புகளிலும் சுமார் 15%ஐக் குறிக்கிறது. அந்த 350,000 வேலை வாய்ப்புகளில் 20,000 ஆடைத் தொழிலில் உள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களிலாகும். இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருவாயில் சுமார் பாதி பங்களிப்பை வழங்கும் இந்த 350,000 வேலை வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு, இலங்கை ஆடைத்துறையும் அதனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையும் பொருளாதார ரீதியாக முக்கிய பங்கு வகிக்கிறது என்பது தெளிவாகிறது.

### கீழ் மட்டத்திலுள்ள இடையூறுகள்

"நாட்டில் மற்றும் ஆடைத் தொழிலில் உள்ள பல பெரிய நிறுவனங்கள் ஆரம்பத்தில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களாகத் தங்கள் வணிகங்களைத் தொடங்கின என முன்னணி ஆடை உற்பத்தி நிறுவனமான சரசவி எக்ஸ்போர்ட்ஸின் தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளருமான ஹேமந்த பெரேரா தெரிவித்தார். பல தடைகள் மற்றும் சவால்கள் இருந்தபோதிலும், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEs) இலங்கையின் ஆடைத் தொழிலின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு இன்றியமையாத காரணியாக மாறியுள்ளன. மேலும் தொழில்துறையிலிருந்து அதிகம் எதிர்பார்க்காமல் அவர்களால் அத்தகைய முக்கிய பங்கை தொடர்ந்து செய்ய முடிந்துள்ளது."

இருப்பினும், கொவிட்-19 தொற்றுநோய் ஆரம்பித்தவுடன், பல சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடை தொழில்முனைவோரின் அன்றாட நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப் பட்டன. அவர்கள் தங்கள் வர்த்தகங்களை மீண்டும் கட்டமைக்க திட்டமிட்ட முறைமையொன்றை பெற்றுக் கொடுக்க வேண்டுமென அவர்கள் கோருகின்றனர். அவர்களுக்கு இருக்கும் மிகப்பெரிய தடையானது SME துறையின் தற்போதுள்ள வியூகமாகும்.

80% சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEs) பெரிய ஏற்றுமதி நிறுவனங்களுடன் இணைந்து





தங்கள் வணிகங்களுக்கான ஆர்டர்களை வழங்குகின்றன. இலங்கையில் ஆடைத் தொழில் தடையில்லாமல் தொடர்ந்தாலும், ஆடைகளுக்கான ஆர்டர்கள் குறைவதால் தேவைப்படும்போது பெரிய நிறுவனங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க இந்தத் துறைக்கு வாய்ப்பு கிடைத் துள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர நிறுவன ஆடைத் துறை எப்போதும் போதுமான ஆர்டர்களைப் பெறுவதில்லை. சராசரியாக, ஒவ்வொரு ஆண்டும் சுமார் 3 மாதங்கள் ஆர்டர்கள் குறையும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த நேரத்தில், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் உற்பத்தி நடவடிக்கைகள் பெரும்பாலும் செயலற்றதாக இருந்தன என இலங்கையின் நடுத்தர அளவிலான ஆடை வர்த்தகமான ஸ்டிலோ ஆடைத் தொழிற்சாலையின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரத்ன திசேரா தெரிவித்தார்.

### வர்த்தக புனர்நிர்மாணத்திற்கான நிதி

கொவிட்-19 தொற்றுநோய் ஆரம்பித்தவுடன், உலகெங்கிலும் உள்ள ஆடை உற்பத்தியாளர்கள் ஆர்டர்கள் இரத்து செய்யப்பட்டதால் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டனர். இதன் விளைவாக, சிறு மற்றும் நடுத்தர அளவிலான ஆடை வணிகங்கள் எல்லா இடங்களிலும் நாளுக்கு நாள் பாதிப்படைந்து வருகின்றன. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடை வணிகங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான பாதுகாப்பான உத்திகளைக் கண்டுபிடிப்பதற்கு மேலதிகமாக, வணிகத்தை மீண்டும் தொடங்க நிதி மூலதனத்தை திரட்டுவது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது.

வியாபாரம் செழித்து வளரும் போது கூட, செயல்பாட்டு மூலதனத்தைக் கண்டுபிடிப்பது ஒரு சவாலாகும். அதைச் சமாளிக்க எங்களுக்கு சில ஆதரவு தேவை. ஒரு தொழிலைத் தொடங்க யாருக்கு விரைவாக உழைக்கும் மூலதனம் தேவை என்பதை சரியாகக் கண்டறிவது எங்கள் அனைவருக்கும் முக்கியமானது. கூடுதலாக, வணிகங்கள் தடையின்றி பாதுகாப்பாக இயங்குவதை உறுதி செய்ய வேண்டும் என சன்க்வின் ஆடைத் தொழிற்சாலையின் பணிப்பாளர் ருஷான் பெரேரா தெரிவித்தார்.

### சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடை வணிகத்தின் திறனை பாதுகாப்பாக அதிகரிக்க தடுப்பூசி அவசியம்

பல சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடை வணிகங்கள் இந்த நிலைமை பல மாதங்களுக்கு தொடரும் என்று எதிர்பார்க்கின்றன. அவர்கள் அனைவருக்கும் கொவிட் மூன்றாவது அலைக்கான தீவிர சாத்தியம் குறித்த அச்சம் உள்ளது. சிறிய மற்றும் நடுத்தர ஆடை வணிக உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் தங்கள் சுய பாதுகாப்பை மேம்படுத்தி எவ்வாறு ஆடை உற்பத்தித் தொழிலை மேற்கொள்வது என்பது தொடர்பில் அக்கறை கொண்டுள்ளனர். தடுப்பூசி என்று வரும்போது இது ஒரு பெரிய தடையாக இருக்கிறது மற்றும் புவியியல் ரீதியாக பெரிய பகுதியில் இதைச் செய்வது சவாலாக இருக்கின்ற போதிலும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடைத் தொழிலின் எதிர்காலத்திற்கு தடுப்பூசி மட்டுமே தீர்வு என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும்.

"எங்கள் உறுப்பினர்களில் 20,000க்கும் மேற்பட்டோர் வேலை செய்கிறார்கள். அவர்களில் 90%க்கும் அதிகமானோருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எங்கள் சங்கத்திற்கு வெளியே உள்ள பல சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடை தொழில்முனைவோருக்கும் கொவிட் தடுப்பூசி வழங்கப்பட வேண்டும். வேலைக்குச் செல்வதற்கு இது அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கையைத் தரும்" என இலங்கை ஆடை ஏற்றுமதியாளர் மன்றத்தின் செயலாளர் ரோஷன் டி சில்வா தெரிவித்துள்ளார்.

### முன்னேற்றம் : கீழ்மட்ட ஆதரவு

இதுதொடர்பாக இலங்கை ஒன்றிணைந்த ஆடை சங்கம் (JAAF) பாதுகாப்பான முறைமை குறித்து சிறந்த திட்டமொன்றை பகிர்ந்து கொள்வதற்கு தமது உறுப்பினர்களுடன் நடைமுறைப்படுத்துவதுடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடை வணிக துறையிலுள்ள தொழிலாளர்களுக்கு துரிதமான தடுப்பூசி ஏற்றுவதற்காக பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் அரசுடன் இணைந்து செயற்பட துரித நடவடிக்கை எடுத்துள்ளது.

"அடுத்த கட்டமாக, தொழிலாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு தடுப்பூசி வழங்குவது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். ஒரு குடும்ப உறுப்பினர் காரணமாக ஒரு ஊழியர் பாதிக்கப்பட்டு வீட்டிலேயே தங்கியிருப்பது அல்லது தேவையில்லாமல் கவலைப்படுவதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நாம் மீண்டுமொருமுறை நீண்டகால நெருக்கடியை எதிர்கொண்டால், நாம் மீண்டும் எழுந்து நிற்பது மிகவும் கடினம்" என ரெயின்போ ஆடைத் தொழிற்சாலையின் பிரதான நடவடிக்கைகள் அதிகாரி டென்வர் ஜயசுந்தர தெரிவித்தார்.

GSP+ முன்னுரிமை வரி நிவாரணத்தைப் பெறுவது நாட்டில் உள்ள பல சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மற்றொரு எதிர்பார்ப்பாகும். இது ஐரோப்பிய ஒன்றியம் பரிந்துரைத்த நிலைத்தன்மை, தரமான தயாரிப்பு மற்றும் தரத் தேவைகளுடன் சந்தைகளில் நேரடியாக ஊடுருவிச் செல்லும். ஐரோப்பிய ஒன்றியம் GSP+ சலுகையின் தொடர்ச்சியானது அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற ஒத்த GSP திட்டங்களைக் கொண்ட சந்தைகளுக்கு ஒரு உத்தரவாதமாகும்.



